கலியுகாப்தம் 5117 2016 பங்குனி – சித்திரை

# இந்துக்களின் குரல்

## Voice of Hindus

## "மதம் மாறுவது அவமானம்"




உலகிலேயே இந்துக்களைத்தான்
மிக அதிகமாக மதமாற்றத்திற்காக
குறிவைக்கின்றனர்

ISSN:24489220

இந்து தேசிய மாத இதழ்

அன்பளிப்பு
50.00

# லிங்கம்

## கூல் பார்

52.Clock Tower Road
Jaffna.Sri Lanka




# LINGAM

## Cream House



576.Point Pedro Road
Nallur,Jaffna,Sri Lanka
119,Kasthuriyar Road,
Jaffna.

# LINGAM

## Cream House



6055,Steeles Avenue East,
Toronta ONM1X0A7,Canada
001 416 5464

E-mail:shagilan@gmail.com
www.facebook.com/lingancoolbar

சிவமயம்

# இந்துக்களின் குரல்

# VOICE OF HINDUS

Email: voiceofhindus5@gmail.com
Web: inthukkalinkural.blogspot.com

இந்துத் தேசியமாத இதழ்

கோப்பாய் தெற்கு,
கோப்பாய்,
யாழ்ப்பாணம்.
0770226200
0779603001

செட்டியார் தெரு,
குருக்கள்மடம்,
மட்டக்களப்பு.
0755511437
0654909457

மலர் 02
குரல் 08

ஆசிரியர் குழு
யோ. துஸ்யந்தன்
என்.பி.ஸ்ரீந்திரன்
சிவசுதர்சனன்

சஞ்சிகையில் உள்ள ஆக்கங்கள் சில இந்துதத்துவ தகவல் களஞ்சியத்திற்கு உரியவை.

கலியுகாப்தம் - 5117
மன்மத வருடம்
பங்குனி - சித்திரை

உள்ளே ஒலிப்பவை..................

- ரஷ்ய தேசம் தமிழைக் கொண்டாடுகிறது.
- ஜீ.யூ போப் அவர்களும் திருவாசகமும்
- ஆறுபடை வீடுகள்.
- இந்து மதமும் மதமாற்றமும்.
- மகா கும்பமேளா
- அது ஒரு காலம்.
- லிங்கோற்பவர்.
- புராணக்கதை.
- எமது தேவை.
- ஆதி சங்கரர் சித்திரக்கதை.
- இந்து சமயத்திற்கோர் அறிமுகம்.
- அறிந்து கொள்வோம்.
- இலங்கைப் பதிவுகள்.
- ஜோதிடம் கற்றுக்கொள்ளலாமா?
- தமிழர் விடுதலைக்கான நுழைவாயில்....
- உலகப் பதிவுகள்.
- ஸப்த கன்னியர்.
- கேளுங்க சொல்கிறோம்.
- சொல்கிறோம் கேளுங்க.
- நல்லதைப் பேசுங்கள்.
- வேலையில் கவனக்குறைவு கூடாது.
- இந்துத் தமிழர் வரலாற்றில்........
- பேசும் படங்கள்.

"இந்துக்களின் குரல்"

'இந்துக்களின் குரல்' என்பது வெறும் பத்திரிகை மட்டுமல்ல. இது ஓர் இயக்கம். இந்துக்களின் எழுச்சிக் குரல். தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் நடைபெறும் போராட்டத்தில் தர்மத்திற்காக குரல் கொடுக்காமல் வெறுமனே மௌன சாட்சியாக இருந்து வேடிக்கை பார்ப்பது அதர்மத்திற்கு துணை போனதாகத் தான் கருதப்படும்.

'இந்துக்களின் குரல்' தர்மத்தை பாதுகாப்பதற்காக போராடும் பத்திரிகை. அதர்மத்தின் முகத்திரையை கிழித்து தர்மத்தை வெற்றி பெறச்செய்வது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

இந்துக்களின் குரல்' எங்களால் வாங்குவது, படிப்பது மட்டுமல்லாமல் எமது நண்பர்கள், உறவினர்கள் பலரை வாங்க வைப்போம். மதமாற்றங்களை தடுக்கவும், இந்து ஒருங்கிணைப்புப் பணிக்கும் உதவிடுவோம். நன்றே செய்வோம், அதை இன்றே தொடங்குவோம்.

- இந்து என்பதில் பெருமிதம் கொள்வோம்-
"இந்து இன்றே ஒன்றுபடு"


**அன்பான இந்துக்களே! வணக்கம்.**

"இந்துக்களின் குரல்" பல்வேறு சோதனைகள், வேதனைகளை தாண்டியே ஒலித்துக் கொண்டிருக்கிறது. இருப்பினும் எமது இந்துக்களின் நிலையினை நன்கு உணர்ந்த பின்பே இந்த முயற்சியை நாம் தொடங்கினோம். எமது சுய மறதி மற்றும் அலட்சியப் போக்கினை அனுபவித்த பின்னரும், பலரின் எதிர்மறை கருத்துக்களை கேட்ட பின்னரும் துணிந்தே இந்தக் காரியத்தில் இறங்கினோம். இந்துத்துவம் கண்ட வீர சாவர்க்கர் அவர்களின் சிந்தனையான "வந்தால் உன்னோடு, வராவிட்டால் தனியாக, எதிர்த்தால் உன்னையும் எதிர்த்து இந்து சமுதாயப்பணி புரிவேன்" என்கின்ற அந்த உயரிய எண்ணத்தையும், "யாமார்க்கும் குடியல்லோம் யமனை அஞ்சோம்" என்று முழங்கிய உழவார தொண்டராம் அப்பரின் வீர முழக்கத்தையும் மனதிருத்தியே செயல்புரிகின்றோம். உலக முதல்வனாம் எங்கள் தில்லைக் கூத்தனின் திருப்பாதங்களை இறுகப்பற்றிய படி இவ் இறைபணியை முன்னிறுத்திச் செல்கிறோம். இது என்றும் அடங்காத உரிமைக்குரலாக இலங்கையில் என்றென்றும் ஒலிக்கும்.

நிற்க ........

இன்று எம் மக்கள் எவ்வாறு இருக்கிறார்கள். அவர்களின் எதிர் பார்ப்புக்கள் என்ன? என்றவாறான கண்ணோட்டத்தை செலுத்துவோம்.. உண்மையில் எமது சமுதாயம் இடைவிடாமல் எல்லாவித பேரிடர்களுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளது. மன முறிவும், ஏமாற்றமும், எப்பொழுதும் கண் முன்னே நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறானதொரு நிலையில் பல்வேறான உணர்ச்சிச் சிக்கல்கள் சமுதாயத்தில் ஏற்படுவது இயற்கையே. இத்தகைய சூழ்நிலையில் சிலர் கோப வெறியுடன் அவ நம்பிக்கை நிறைந்த சூழ்நிலையை மாற்றப் பாடுபடுகிறார்கள். ஆனால் அதற்கான சக்தி அவர்களிடம் இருப்பதில்லை.ஆனாலும் சூழ்நிலையை சமாளிக்க இயலாத பலங்குன்றிய நிலையில் தாம் இருப்பதை அவர்கள் காண்கிறார்கள். எனினும் அவர்களின் உள்ளங்களில் எரியும் தீயானது கையாலாகாத பார்வையாளர்களாக உட்கார்ந்து விட அனுமதிப்பதில்லை. வீரச்சுடரை உயர்த்திப் பிடித்தபடி உயிர் துறப்பதே சிறந்தது என கருதி தியாகச் சுடர் வீசி தங்களையே அழித்து விடுகிறார்கள். கொள்கைக்காக உயிர் துறக்கின்ற அந்த மனிதர்கள் வீரர்கள். விதிக்கு அடிமையாகி அச்சத்திலும் சோம்பலிலும் ஊமையாக உழலும் மனிதர்களை விட இவர்கள் உயர்ந்தவர்களே. இந்த உயிர்த் தியாகிகளுக்கு தேசியப் புனர் நிரமாணப் பணியில் கௌரவமான ஓரிடம் உள்ளது. ஆனால் அத்துடன் அனைத்தும் முடிந்து விடுவதில்லை.

எமது வாழ்க்கையில் முழுமையான வெற்றி அடைவதில் தான் உண்மையான சிறப்புத் தன்மையும் மேன்மையும் அடங்கியுள்ளது. அதனை அடைவதற்கு கொந்தளிக்கும் கடல் ஆர்ப்பரிக்கும் புயல் இவற்றின் மத்தியில் எமது அசாதாரணமான துணிச்சலாலும் ஆற்றலாலும் வீரமாக போராட வேண்டும். அலை அலையான எதிர்ப்புச் சூழ்நிலைகளை எமக்கு சாதகமாக திருப்பிக் கொள்வதில் நாம் வெற்றி பெற வேண்டும். நாம் வாழும் காலத்தை நாமே உருவாக்க வேண்டும். உண்மையில் அறிவுள்ள பக்குவம் அடைந்த மனிதர்கள் சூழ் நிலைகளை கண்டு வெறும் எதிர்ச் செயல் மட்டும் புரிவதில்லை. சந்தர்ப்பம் சூழ்நிலைகளை தமது கட்டுக்குள் வைக்க வேண்டும் என்ற தீர்மானத்துடன் அவர்கள் துணிவுடன் செயல் புரிகிறார்கள். பக்குவம் அடைந்தவர்களுக்கு கொல்வதோ கொல்லப்படுவதோ ஒரு போதும் குறிக்கோளாக இருக்கமுடியாது. ஆர்களது மனப்பான்மை ஆக்கபூர்வமானது. நல்ல முன் யோசனையோடு தீர்மானிக்கப்பட்ட பாதையில் அமைதியாக முன்னேறுவார்கள். அதுவே எம்மை இறுதி வெற்றிக்கு இட்டுச் செல்லும்.



**RUPA VERSATILE TRADES**

SB Glaxo Smithkline Ltd

Distributors for:

No. 104A Stanley Road,
Jaffna.
Tel:- 021- 222 8330
Fax:- 021- 222 7036

Colombo-office
176A, Central Road,
Colombo-12
Tel:- 011 5-830217
:- 011 5-830219
Fax:- 011 2392412

RECKITT BENCKISER (LANKA) LTD
A.B. MAURAI LANKA LTD.
CEYLON BISCUITS (LANKA LIMITED)

# ரஸ்ய தேசம் தமிழைக் கொண்டாடுகிறது

தமிழ் கடல்கடந்தும் வாழும் என்ற நம்பிக்கையூட்டும் செய்தி ஒன்றாக இதனை நாம் நோக்க முடியும். அந்நிய மண்ணில் அன்னைத் தமிழுக்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவம்! இது என்று கூற வேண்டும்.



"தமிழன் தமிழில் எழுதினாலோ பேசி னாலோ பாராட்டு வது நாமாகத் தான் இரு ப் போம். நம் மொழியை நாம் பேசவே பாராட்டு கிறோம்.


ஆந்தளவிற்கு போய்விட்டது எமமவரின் மொழிப்பற்று. ஆனால் தமிழுக்குத் தொடர்பே இல்லாத ரஸ்ய நாடு தமிழைக் கொண் டாடுகிறது. அங்கிருக்கும் ரஸ்ய அதிபர் மாளிகையான கிரெம்ளின் மாளிகையின் பெயரை அவர்கள் அழகுத் தமிழில் எழுதியுள்ளார்கள். முதலாவதாக அவர்கள் தாய் மொழியான ரஸ்ய மொழியிலும் இரண்டாவதாக அண்டை நாட்டு மொழியான சீனத்திலும் உலகத் தொடர்பு மொழி என்ற நோக்கில் ஆங்கிலத்திலும் நான்காவதாக தமிழிலும் எழுதியிருக்கிறார்கள். தமிழைவிட எத்தனையோ உலக மொழிகள் பெரும்பாலான மக்களால் பேசப்படுகின்றன. ஆனால் அவற்றை யெல்லாம் விட்டுவிட்டு தமிழ்மொழியில் அதிபர் மாளிகையின் பெயரை எழுதியதற்கு அவர்கள் கூறும் காரணம் தமிழர்களாகிய நம்மைச் சிந்திக்க வைப்பதாக இருக்கிறது.

"உலகில் 6 மொழிகள்தான் மிகவும் தொன்மையானவை. அவை கிரேக்கம் லத்தீன் எபிரேயம் சீனம் தமிழ் சம்ஸ்கிருதம். இந்த 6 மொழிகளில் நான்கு மொழிகள் இன்று வழக்கில் இல்லை. இலக்கிய வரலாற்று செழுமையான மொழி எங்களுக்கு உலகில் உள்ள முக்கிய மொழிகளான 642 மொழிகளிலும் சரியான தகுதியான மொழியாக தமிழ்மொழி தென்பட்டது. அந்த மொழியைச் சிறப்பிக்கவே "கிரெம்ளின் மாளிகை" எனத் தமிழில் எழுதினோம்" என்று கூறுகிறார்கள். மேலும் அங்கே வைக்கப்பட்டுள்ள அரிய நூல்களுள் நமது திருக்குறளும் ஒன்று. வெளிநாட்டில் உள்ளவர்களுக்குக்கூட நம் தமிழின் பெருமை தெரிந்துள்ளது. ஆனால் நாமோ தமிழைக் காப்பாற்ற கருத்தரங்கு நடத்திக் கொண்டிருக்கிறோம்". தமிழனாகப் பிறந்து தமிழ் பேசத் தயங்கும் தமிழர்கள் இனியாவது தமிழ் மொழியின் அருமை பெருமையை உணர்ந்தால் சரி!



# ஜீ.யூ. போப் அவர்களும் திருவாசகமும்

முனைவர் கோ.ந. முத்துக்குமாரசுவாமி



மேலைநாட்டுத் தமிழறி ஞர்கள் பலருள்ளும் ஜி.யூ, போப் அவர்களின் மீது தமிழர் களுக்கு ஒரு தனிப் பாசம் உண்டு. அதற்குக் காரணமும் உண்டு.

மேலைநாட்டுத் தமிழறிஞர்கள் தங்களுடைய மதத்தினைப் பரப்பவே தமிழைப் பயின் றனர். டாக்டர் ஜி.யூ.போப்பும் அவர்களைப் போலவே தம் முடைய மதத்தைப் பரப்பவே தமிழ் கற்றாலும், சைவத் தமிழை, குறிப்பாகத் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து மேலைநாட்டவர்க்கு அறிமுகப்படுத்தினார். தமிழரின் உண்மைச் சமயம் சிவநெறியே என்பதைத் திடம்பட எடுத்து மொழிந்தார் போப் அவர்கள் தாம் அறிந்து போற்றி வணங்கிய மேலைநாட்டு மெய்ஞ்ஞானிகளான தவத்திரு. பால், அசிசி நாட்டுத் துறவி அருள்திரு பிரான்சிஸ் போன்றோரின் வாழ்வையும் வாக்கையும் அவர் திருவாசகத்தில் கண்டு மகிழ்ந்தார் "In the whole legendary history of this sage …… …. there stands out a real historical character which seems to be a mixture of that of St. Paul and of St. Francis of Assisi. **Under other circumstances what an apostle of the East might had become**". தடித்த எழுத்தில் உள்ள கடைசிவரி போப்பின் மனநிலையைச் சுட்டுகின்றது. அந்த சூழ்நிலையில் ஒரு கீழ்த்திசை சமயகுரு இதைக்காட்டிலும் என்ன மேனிலையை அடைந்துவிடக் கூடும் என்ற கூற்றில் மணிவாசகப்பெருமான் எய்திய சிவமாம் தன்மையைப் போப் சரிவர உணர்ந்து கொள்ளவில்லை என்றே தோன்றுகின்றது.

போப்பின் திருவாசகக் காதல் குறித்துக் கதை ஒன்றும் திருவாசகப் பேச்சாளர்களால் மேடைதோறும் கூறப்படுகின்றது. போப் தமிழகத்தில் உள்ளவர் களுக்குக் கடிதம் எழுதும்போது முதலில் ஒரு திருவாசகப் பாடலை எழுதுவாரென்றும், அப்படி யாருக்கோ எழுதிய ஒரு திருவாசகப்பாடலை எழுதும் போது உள்ளம் உருகிக் கண்ணீர் பெருகிக் கடிதத்தின் மீது விழுந்து எழுத்தை அழித்து விட்டதென்றும் அது திருவாசகத்தால் வந்த புண்ணியக் கண்ணீர் ஆதலால், அப்புனிதக் கண்ணீர் பட்டு அழிந்த எழுத்தின் மீது மீண்டும் எழுதாமலேயே அக்கடிதத்தை அனுப்பியதாகவும் கூறுவர்.

இது ஒரு கதை என்றே எண்ண என் மனம் துணிகின்றது. இது யாருக்கு அனுப்பப்பட்ட கடிதம், அதில் எழுதப்பட்ட திருவாசகப்பாடல் யாது, அந்தக் கடிதம் என்ன ஆனது, அந்தக் கடிதத்தைப் பற்றி எழுதிய போப் அவர்களோ, கடிதம் எழுதப் பெற்றவரோ, அவருக்குத் தொடர்பானவர்களோ இந்நிகழ்ச்சியைப் பற்றி எங்காவது குறிப்பிட்டுள்ளனரா?





இந்த நிகழ்ச்சி உண்மையாயின் போப் அவர்கள் தம் திருவாசக மொழி பெயர்ப்பின் மறு பதிப் பிலாவது வெளியிட்டி ருப்பாரே. அவரை மிகப் பாராட்டும் திருவாசகமணி கே.எம் பால சுப்பிரமணியம் அவர் களாவது தம்நூலில் ஆதா ரத்துடன் வெளியிட்டிருப்பாரே எனும் ஐயங்கள் தோன்றுகின்றன.

போப்பின் திருவிளையாடல் வளரும்...

# ஆறுபடை வீடுகள்

சா.சோமதேவக்குருக்கள்( பிரதம குரு)
அரச கேசரிப் பிள்ளையார் கோயில்
நீர்வேலி



எங்கும் சிவனிருப்பான் ஆனாலும் ஏசற்ற
சங்கமத்தும் சற்குருவின் தன்னிடத்தும்-ஆவினிடமும்
எல்லாமும் ஆவுரித்து நிற்கினும் பால்
பரவு முலைக்கண் மிகுதிப்பார்.
(சிவஞானப்பிரகாச வெண்பா)


பசுவின் உடல் முழுதும் பால் பரவி இருக்கிறது ஆயினும் மடியின் மூலமே அதனைப் பெற முடியும். அங்ஙனமே சிவபிரான் காணுமிடமெங்கணும் நீக்கமற நிறைந்து பரி பூர்ண ஆனந்த வெள்ளமாய் உறைந்திருந்த போதிலும் அவன் அருள் ஆலயங்களின் மூலம் வெளிப்படுகிறது. மகரிஷிகள் இறைசக்தியால் தவ வலிமை பெற்று ஒரு முகப்பட்டவர்களாய் இறை மூர்த்தங்களை பிரதிட்டை செய்து மக்கள் அருள் பெற வழி வகுத்துள்ளனர். அவர்கள் பெயராலே இடம், திவ்விய தேசம், சேத்திரம், மற்றும் விருட்சம், நீர் நிலைகள் வழங்கப்படுகின்றன. சமய வாழ்க்கையில் அடிப்படையாக அமைந்துள்ளது ஸ்தல தரிசனம் (தல யாத்திரை)

மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு
வார்த்தை சொல்ல சற்குருவும் வாய்க்கும் பராபரமே
(தாயுமான சுவாமிகள்)

தில்லை தில்லை என்றால் பிறவி
இல்லை இல்லை என்று மறை மொழியும்
(நந்தனார் சரித்திரக் கீர்த்தனம்)


மகிமையுடன் விளங்கும் இத்தகைய தலங்களுக்கு ஒரு முறையாவது சென்று வழிபட்டு திருவருள் அனுபவம் பெற வேண்டும் என பெரியோர் பாடியுள்ளனர்.

கலியுக வரதன் கந்தப் பெருமானுக்கு நம் நாட்டில் பல ஆலயங்கள் இருக்கின்றன. ஆனால் இந்தியாவில் உள்ள ஆறுபடை வீடுகளில் அமைந்த திருக்கோயில்கள் பிரசித்தமானவை.



திருச்செந்தூர்


தமிழ் நாட்டில் உள்ள திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச் செந்தூர்) திருவாவினன் குடி (பழனி) திருவேரகம் (சுவாமிமலை) குன்றுதோருடல் பழமுதிர்ச் சோலை ( அழகர் கோயில்) ஆகிய ஆறு ஸ்தலங்களே ஆறுமுகனுக்கு உகந்த ஆறுபடை வீடுகளாகும்.



திருப்பரங்குன்றம்

வறுமையில் வாடிய ஒருவன் தன் வறுமையைப் போக்கிய வழிவகைகளை மற்ற ஒருவருக்கு எடுத்துக் கூறி அவரின் துன்பம் நீக்க வழி சமைப்பதை ஆற்றுப்படுத்தல் என்று கூறலாம். பெரும்பாணா ற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை இவ் வகையைச் சாரும். அவ்வண்ணமே முருகன் அருளைப் பெற வழிசமைத்து நக்கீரரால் பாடப்பட்டதே திருமுரு காற்றுப்படை என்ற சிறந்த பக்தி நூலாகும். ஆற்றுப்படை என்பது மருவி ஆறுபடையானது. நக்கீரரை பின்பற்றி கச்சியப்ப சிவாச்சாரியார், அருணகிரிநாத சுவாமிகள், குமரகுருபர சுவாமிகள் முதலியோர் ஆறுஸ்தலங்களையும் போற்றிப் பாடியுள்ளனர்.

ஆறு திருப்பதி கண்டு ஆறெழுத்தும் அன்புடன்
கூறுமவர் சிந்தை குடி கொண்டோனே
(கந்தர் கலி வெண்பா 109)



திருத்தணி


மேலான தேவாலயங்கள் எல்லாம் ஆறுபடை வீட்டினுள்ளே அடக்கம் எனப் பக்தர்கள் புகழுகின்றனர். பாம்பன் சுவாமிகள் சண்முக கவசம் எனும் நூலில் ஆறு திருப்பதிகளையும் குறிப்பிடுகின்றார்.

ஏரகத் தேவன் என் தாள் இரு முழங்காலும் காக்க, சீறுஞபடை கணைகால் தனைச் சீரலைவாய்த் தேவன் காக்க, தேருடை பிரடி இரண்டும் திகம்பர கிரியன் காக்க, சீரிய குதிக்கால் தன்னைத் திருச்சோலை மலையன் காக்க, ஐயுறு மலையன் பாதத்தமர் பத்து விரலும் காக்க, பையுறு பழனி நாதபரன் அகங்காலைக் காக்க, மெய்யுடன் முழுதும் ஆதிவிமலன் சண்முகவர் காக்க, தெய்வ நாயக விசாகன் தினமும் என் நெஞ்சைக் காக்க (8-9)




பழமுதிர்ச் சோலை

வள்ளி மலை சுவாமிகள் ஞாயிறு-திருப்பரங்குன்றம், திங்கள்-திருச்செந்தூர்,செவ்வாய்-திருவாவினன்குடி, புதன்-திருவேரகம்,வியாழன்-குன்றுதோருடல்,வெள்ளி-பழமுதிர்ச்சோலை,சனி-எல்லாத்தலங்களும் என்று வகுத்துவழிபட கந்தன் அருள் கிட்டும் எனக் கூறுகின்றார்.



பழனி

ஆகவே ஆறுமுகத்துக்கு உகந்த ஆறுபடை வீடுகளையும் ஒவ்வொருவரும் தரிசித்து திருவருள் பெறுவோமாக.



சுவாமி மலை

ஆறபடை வீடுகளுக்கு செல்ல வாய்ப்பு இல்லாதவர்கள் நாம் இருக்கும் இடத்தில் இருந்தே இத்தலங்களை நினைத்து துதி செய்து கந்தன் அருள் பெறலாம் என அருணகிரி நாதர் கந்தர் அந்தாதியில் பாடியுள்ளார்.

திருவாவினன்குடி பங்கனார் என் முது சீருரைச்
திருவாவினன் குடி அரனார் பரங்குன்று சமுரலைவாய்
திருவாவினன் குடி பேரகம் குன்று தோருடல் சென்று
திருவாவினன் குடி கொண்டதண்கார்வரை
செப்புமினே (கந்தர் அந்தாதி)

ஏமாற்றாதே! ஏமாற்றாதே! ஏமாறாதே! ஏமாறாதே!

# இந்து மதமும் மதமாற்றமும்

பிறரைத் தம் மதத்திற்கு மாற்றும் கொள்கையை அடியோடு கைக்கொள்ளாத ஒரே பெரும் தர்மமான இந்து தர்மத்திற்கு அதன் கொள்கைகளில் சுய விருப்பம் ஏற்பட்டதன் மீதேதான் பிற நாட்டு நல்லறிஞர், அநுதாபிகள் ஆகியோர் ஈர்க்கப் பெற்று அதனைத் தழுவியிருக்கின்றனர் என்பது கவனத்திற்குரியது.

இந்து தர்மத்தின் தலைவர்களும் பழங்காலங்களில் பவுத்த-சமண மதத்தினரை இந்து தர்மத்திற்கு மாற்றியுள்ளனரே என எதிர்க் கேள்வி விடுக்கலாம். இதற்கு எமது விடை, அதற்கு முற்காலங்களில் இந்துக்களாகவே இருந்து அப்புறச்சமயிகளின் பிரசாரத்தால் அச்சமயம்களுக்கு மாறியோரைத்தான் அத் தலைவர்கள் மீண்டும் தாய்ச் சமயத்திற்கு மாற்றினர் என்பதேயாம்.

பிற்காலங்களிலோ இந்துத் தலைவர்கள் அவ்விரு புற மதங்களில் தலைமுறைகளாக இருந்துவந்த ஆதி இந்துக்களை மீண்டும் தாய்ச் சமயம் மாற்றுவதில் ஈடுபடவில்லை. இந்துக்களில் புதிய தலைமுறையினர் அம்மதங்களுக்கு இழுக்கப்படுவதை மட்டுமே தடுக்க முயற்சி செய்யலானார்கள்.

அரசியல் ரீதியிலும் வாணிப ரீதியிலும் இங்கு குடியேறியவர்களைக் கூட இந்து சமயத்திற்கு மாற்ற இந்துக்கள் எண்ணியதுகூட இல்லை. பின்னாளில் முஸ்லீம்களும், கிறிஸ்துவர்களும் இங்கு பெருமளவில் பிரவேசித்து, அதோடு நில்லாது, இந்துக்களை வலிவுடனேயே மத மாற்றம் செய்தபோதுங்கூட, பிறப்பாலேயே அப்பிற மதத்தாராக இருந்தோரை இந்துக்களாக மாற்ற இந்துக்கள் எண்ணவில்லை. அதனினும் குறிப்பிட்டத்தக்கதாக, அப்பிற மதங்களை ஏற்கனவே தழுவிவிட்ட இந்துக்களைக்கூட மீண்டும் தாய்மதம் மாற்றாமல் புதிதாக மேன்மேலும் இந்துக்கள் அம்மதங்களுக்கு இழுக்கப்படுவதைத் தடுப்பதற்காக மட்டுமே எதிர்ப் பிரசாரம் செய்தனர்.

பொதுவாக இந்து சமய மன்னர்கள் யாவரும் அந்த எல்லாப் புறச்சமயிகளும் அவரவரது ஆலயங்களை இங்கு எழுப்பிக் கொள்ளத் தாராளமாக அனுமதித்தனர், அவர்களில் பலர் சமய சமரஸத்தில் மேலும் ஒரு படி சென்று அப்புறச் சமய ஆலயங்களுக்கு மானியம் முதலியன அளித்தனர், இன்னும் சில மன்னர்களோ தாங்களே புறச்சமயங்களுக்காக ஆலயங்கள் எழுப்பித் தந்துமிருக்கின்றனர்.

மொத்தத்தில், இந்துக்கள் தாமாக offensive ல் எதிர்த்துச் சென்று தமது சமயத்திற்கு ஆள் சேர்த்ததே கிடையாது. மேன்மேலும் தம் மதத்தினரின் எண்ணிக்கையை சிதைவுறாமல் தடுக்கும் தற்காப்பே (defensive-ஏ) அவர்கள் செய்தது.

இந்து சமூகத்தினர் பழங்காலங்களில் பெருமளவில் செய்தது தற்காலத்தில் சிறிய அளவில் கூட செய்யமுயற்சிக்காமல் இருப்பது இந்துக்களை பொறுத்த வரை அவர்களின் விழிப்புணர்வற்ற

நிலையையே காட்டுகின்றது. இவ்வாறு செய்வது முன்னர் ஏற்பட்டிருந்த எதிர்ப்பை எதிர்த்துச் செய்யும் புனர் - மதமாற்றம் (re-conversion) தானேயன்றி, பிற மதத்தினராகவே இருப்போரை எதிர்த்துத் தம் மதத்திற்கு மாற்றம் செய்வதல்ல என்பது கவனிக்கப்பட வேண்டியதொன்று..

இத்தகைய நிலவரத்திலுங்கூட இந்துக்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் முஸலீம்களாகவும், கிறித்துவர்களாகவும் இந்நாட்டிற்கு வந்தோரின் வம்சத்தினரை இந்துக்களாக மாற்றுவதல்ல, இந்துக்களிலேயே சில தலைமுறைகளுக்கு முன் அப் புற மதங்களுக்கு மாறியோரின் வழி வந்தோரைக்கூட மீண்டும் இந்துக்களாக்குவதற்கும் அல்ல. அண்மைக் காலத்தில் அவற்றுக்கு மாற்றப்பட்டோரை மீண்டும் தாய் மதத்திற்கு மாற்றுவதற்கே முயற்சி செய்ய வேண்டும்.

எந்தச் சமுதாயத்திலும் அறிஞர்களாகவும், அனுபவிகளாகவும் ஆய்ந்தோய்ந்து பார்க்க அறியாதவர்களாக உள்ளோரே மிகப் பெரும் பான்மையாக இருப்பது போலவே இந்து சமுதாயத்திலுமுள்ளனர். அப்படிப்பட்ட பாமர மக்கள் பால் உபாய முறைகளால் கூட்டம் கூட்டமாக மதமாற்றம் கண்டுள்ளனர்.

இவ்வுபாயங்கள் இரண்டு வகையானவை. இரண்டும் மத அம்சங்களை விளக்கி அவற்றால் பிற மதத்தினருக்கு அதில் சுயமான பற்றுதல் ஏற்படுத்தாதவையே. ஒன்று பலவந்தம்: மிரட்டி உருட்டிக் கட்டாயக் கெடுபிடியால் மதமாற்றம் செய்வது. ஒரு மதத்தவனின் ஆட்சி ஏற்படுகையில் அல்லது எதாவது அதிகாரம் வாய்க்கையில் பிற மதத்தவருக்கு வரி விதிப்பது அதிகாரத்தைக் கொண்டு நெருக்கீட்டை உண்டாக்குதல் போன்ற நடவடிக் கைகளும் இப்பலவந்தத்தைச் சேர்ந்தனவே. இருண்டாவது, வசிய உபாயம்: கல்வியளிப்பது, நோய் தீர்ப்பது, ஏனைய சமூக நலன்களைச் செய்வது ஆகியவற்றை மத ஸ்தாபனங்களின் மூலம் செய்து, உதவி பெறுவோருக்கு உதவி செய்வோரிடம் ஒரு கடப்பாடு உண்டாக்கி, அதை நேர்முகமாகவோ சாதுரியமாகவோ எடுத்துக்காட்டி மதமாற்றம் செய்வது. இவை யாவற்றினும் கேவலம், லஞ்சமாகப் பொருள் கொடுத்தே ஒரு மதத்தினரை வேறு மதத்துக்கு மாற்றுவது. பலவந்தம், வசியம் ஆகிய இவ்விரண்டுமே பொய்ப் பிரசாரத்தைவிடவும் தவறான வஞ்சகச் செயற்பாடாக இருப்பதால் சட்டபூர்வமாகப் பெருங்குற்றமாக்கப்பட்டு அவற்றுக்குக் கடும் தண்டனை விதிக்க வேண்டும்.

பிறிதொன்றும் உண்டு. ஒரு பிரஜையின் மதச் சுதந்திரம் என்பது அந்நபர் சுதந்திரமாகச் சுய விருப்பத்தில் ஒரு மதத்தைத் தழுவியிருப்பதற்கான உரிமையாகும். இது அவரது உள்ள உயர்வு என்ற மிகவும் உத்தமமான விடயம் குறித்ததாகும். உள்ள உயர்வு கண்ட பிரஜைகளால்தான் ஒரு நாட்டின் நல்வாழ்வே என்பதால் அதற்கு ஊறு விளைவித்தால் அது சாதாரணக் குற்றங்களில் சேராமல் பெரிய குற்றங்களிலேயே சேரும். மதச் சுதந்திரம் என்பது அரசியல் நிர்ணயச் சட்டத்தின் அங்கீகாரம் பெற்றுவிடும் போது அச்சுதந்திரத்தில் குறுக்கிடுவதும் மிகப்பெரும் குற்றமாகும் என்ற காரணத்தையும் கருத்தில் கொண்டால், பொய்ப் பிரச்சாரம், பலவந்தம், வசிய உபாயம் ஆகிவற்றால் மதமாற்றம் செய்வது எவ்வளவு பெரிய குற்றம் என்பது தெரியும். எனவே அதற்குரிய கடுமையான தண்டனை விதிக்க வேண்டும். ஒருவர் தண்டனைக்காக அஞ்சியே குற்றத்தில் புகாதபடி தடுப்பதான punishment என்ற கடுந் தண்டனைக்கான குற்றமாகவே அது சட்டபூர்வமாக ஆக்கப்பட வேண்டும்.

ஆனால் வசிய உபாயத்தால் மதமாற்றம் செய்யப்படும்போதா, அதைக் கண்டுபிடித்து நிரூபிப்பது கடினமாக இருக்கும் எனத் தெரிய வருகிறது. சுய மதத்தினர் மாத்திரமின்றி சகல மக்களும் நல்வாழ்வு பெற உதவி புரிய வேண்டுமென்று தமது மதம் சொல்வதால், அந்த அடிப்படையிலேயே ஒருவரது மதத்தைக் கருதாது அனைவருக்கும் சமூக நலப்பணிகள் செய்வதாக இந்த உபாயத்தைக் கைக் கொள்வோர் கூறித் தப்பித்துக் கொள்ள முடியும். என்றாலும் உதவி பெற்றோர் எத்தகையோர் என்பதை, அவர்களின் சமூகநிலை, அறிவுநிலை, அவர்களில் மதம் மாறியோரின் எண்ணிக்கை ஆகியவற்றைத் தீர்க்கமாக அலசிப் பார்த்து ஆழ்ந்து விசாரணை செய்வதால் உண்மையைக் கண்டுபிடித்து விடலாம். நாட்டினரின் மனவளர்ச்சியில் தனது பொறுப்பை ஓர் அரசாங்கம் உணர்ந்திருந்தால், அது இந்தக் குற்றத்தையும் கொள்ளை, கற்பழிப்பு முதலிய குற்றங்களோடு சேர்த்து வைத்து முக்கியமான கவனம் தந்து தீர்க்கமான புலன் விசாரணை செய்தல் வேண்டும். உள்ளவுயர்வுக்கே ஊறு விளைவித்து, ஒருவரது கொள்கை நோன்பைக் குலைப்பது கொள்ளையடிப்பதோடும் கற்பழிப்பதோடும் சேர்த்து மதிக்கப்பட வேண்டியதேயாகும்.

சுய விருப்பமொன்றின் மீது மட்டுமேயில்லாத மதமாற்றக் குற்றங்களும் நடைபெறுமாயின், அவை நடைபெறும் வரையில் அவற்றுக்கு எதிர் நடவடிக்கையாகத் தாய் மதத்திற்கே மீண்டும் மதம் மாற்றுவதைக் குற்றமாகக் கருதாமல் அரசாங்கம் அனுமதிக்க வேண்டும்.

சுய விருப்பத்தின் மீது எந்த ஒரு பிரஜையின் எந்த ஒரு மதத்தையும் தழுவியிருக்கச் சுதந்திர உரிமையைச் சட்டபூர்வமாக ஓர் அரசாங்கம் அளிக்கும்போது, கையோடு கையாக, அச்சுதந்திரத்திற்கு ஊறு பயப்பதான மத மாற்றத்தைச் சட்டப்பூர்வமாகத் தடுப்பதில் தனக்குள்ள பொறுப்பிலும் கவனம் செலுத்த வேண்டும்

இதனால், எல்லா மதங்களுக்குமே அரசாங்கம் ஒருபோன்ற ஆதரவளிக்க வேண்டும் என்ற கொள்கையை நாம் ஆட்சேபிப்பதாக அர்த்தமாகாது. உரிய முறையில் அவ்வாதரவு நல்கப்படுவதை வரவேற்கவும் வலியுறுத்தவுமே செய்கிறோம்.

# மஹா கும்பமேளா

## 10 கோடி மக்கள் ஒரே இடத்தில் கூடும் அதிசய நிகழ்வு.

10 கோடி மக்கள் ஒரே இடத்தில் கூடும் அதிசய நிகழ்வு என்றதும் இது ஏதோ இந்துக்கள் சம்பந்தப்படாத நிகழ்வு என்று எண்ணி விடாதீர்கள். உலகில் பிரமாண்டத்திற்கு இந்துக்கள் தான் முதலிடம் என்பதை பறைசாற்றும் விடயங்களில் இந்த கும்பமேளாவும் ஒன்று. இலங்கையின் சனத் தொகையைப் போல் 5 மடங்கு மக்கள் கூடும் உலகின் மிகப் பெரிய திருவிழா இது தான் என்கின்றனர் உலக ஆய்வாளர்கள்.




"மஹா கும்பமேளா" விழாவுக்கு கிட்டத்தட்ட 10 கோடி மக்கள் ஒரே இடத்தில் கூடுகின்றனர். அமைதியான முறையில் ஒரே இடத்தில் அதிக மக்கள் கூடும் நிகழ்வாக இது பார்க்கப்படுகிறது. இன்றிருக்கும் எல்லா மதங்களை காட்டிலும் பழைமையானதும் இந்திய வாழ்க்கை முறைகளோடு பின்னிப் பிணைந்ததுமான இந்து மதத்தின் மிக முக்கிய மத சடங்குகளில் ஒன்றாக இந்த "மஹா கும்பமேளா" இருக்கிறது. பல்லாயிரம் வருடங்களாக தொடர்ந்து நடைபெற்று வரும் இந்த திருவிழாவுக்கு பின்னணியில் மிக சுவாரஸ்யமான கதை ஒன்றிருக்கிறது. அந்த கதை என்ன என்பதையும் , இந்த திருவிழா எந்தெந்த இடங்களிலெல்லாம் நடைபெறுகிறது, இந்த விழாவின் சிறப்புகள் என்னென்ன என்பது பற்றிய சுவாரஸ்யமான தகவல்களையும் காண்போம் வாருங்கள்.



### நடைபெறும் இடங்கள்

நான்கு மிக முக்கியமான நகரங்களில் கும்ப மேளா நடக்கிறது. அவை அலஹாபாத் (பிரயாகை), நாசிக், உஜ்ஜையினி மற்றும் ஹரித்துவார். இதில் அர்த்த கும்ப மேளா என்பது அலஹாபாதில் ஆறு வருடங்களுக்கு ஒரு முறை நடக்கும். பூரண கும்பமேளா என்பது பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை மேற்கூறிய நான்கு நகரங்களிலும் நடக்கும். மஹா கும்பமேளா என்பது பன்னிரண்டு பூரண கும்ப மேளாக்களுக்கு ஒருமுறை அதாவது 144 வருடங்களுக்கு ஒருமுறை வரும் நிகழ்வு. அது அலஹாபாத்தில் (பிரயாகை) மட்டுமே நடக்கும்.



### தொன்மை:

கும்பமேளா தொடங்கப்பட்டு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகிறது என்பது நம்பிக்கை. பாகவத புராணம், விஷ்ணுபுராணம் முதலியவற்றில் துர்வாச முனிவரின் கோபமும் அதனால் விளைந்த சாபமும் கூறப்படுகின்றது. இவை தவிர தேவர்களும் அசுரர்களும் பாற்கடலை கடைந்த சம்பவம் ராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களிலும் கூறப்பட்டுள்ளது. சீனப் பயணி யுவான் சுவாங் தன்னுடைய பயணக் குறிப்பில் இந்தியாவில் கும்பமேளா கொண்டாடப்படும் விதத்தைக் குறிப்புகளாக எழுதி வைத்துள்ளார். அவர், ஹர்ஷவர்த்தனர் காலத்தில் இந்தியாவுக்கு வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் வந்த காலம் கிபி 626 645 என்று கணிக்கப்படுகிறது. இவை தவிர இன்னும் சில குறிப்புகளிலும்கூட, கும்பமேளா கொண்டாடப் பட்டதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. ஜகத் குருவான ஆதிசங்கரரும்,. மாத்வாச்சாரியாரும் வாழ்ந்த காலத்தில் கும்பமேளா கொண்டாடப்பட்டதாகவும் அவர்கள் அதில் கலந்து கொண்டனர் என்றும் சில நூல்களில் கூறப்பட்டுள்ளன.




### சாஸ்திரம் கூறுவது

வான சாஸ்திரத்தின்படி, சூரியன் மேஷத்திலும் பிரஹஸ்பதி (குருபகவான்) கும்பத்திலும் பிரவேசிக்கும்போது கும்பமேளா நடத்தப்படுகிறது. மஹா கும்பமேளாவின் போது பிரஹஸ்பதி, சூரியன் இரண்டுமே சிம்ம ராசியில் பிரவேசிக்கின்றன. அதனால்தான் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

மேளா தோன்றிய விதம்:

துர்வாச முனிவரின் கோபத்தினால் இழந்த சுகங்களை மீட்க தேவர்கள் பாற்கடலைக் கடைந்தனர். பல்வேறு இன்னல்களுக்குப் பின், புனிதம் மிக்க பொருட்கள் தோன்றின. இறுதியாக தன்வந்திரி பகவான் அமுத கலசத்துடன் தோன்றினார்.



உலக நன்மையை முன்னிட்டு அசுரர்களுக்கு அமுதம் கொடுக்கக் கூடாது என்று தீர்மானித்த மகாவிஷ்ணு, மோகினி வடிவம் எடுத்து அந்தக் கலசத்தைப் பறித்துக் கொண்டு ஓடினார். அசுரர்கள் அவரை விடாமல் துரத்தினர். பன்னிரண்டு இரவு பகல் அவ்வாறு ஓடினர். நமக்கு அது பன்னிரண்டு வருடம். அவ்வாறு ஓடிய போது அமுதக் கலசத்திலிருந்து சில துளிகள் சில இடங்களில் சிந்தின. அதனால் அந்தத் தலங்கள் புனிதம் நிறைந்தவை ஆயின. பிரயாகை, நாசிக், உஜ்ஜைனி, ஹரித்துவார் ஆகிய இடங்களே அவை. அமுதம் இத்தலங்களில் விழுந்த தினத்திலேயே கும்பமேளா நடத்தப்படுகிறது. அமுதம் விழுந்த இடங்களில் உள்ள நீர் நிலைகளில் அன்றைய தினம் அமுதம் பொங்குவதாக ஐதிகம். அதனால் அந்த நாட்களில் குறிப்பிட்ட தலங்களில் உள்ள ஆற்றில் நீராடினால் பாவங்கள் எல்லாம் தொலைந்து பிறப்பற்ற நிலை சித்திக்கும் என்பது நம்பிக்கை. மேலும் சிவபெருமான் குருவாக இருந்து பிரம்மனுக்கும், தேவர்களுக்கும் உபதேசம் செய்ததால், கும்பமேளாக்களின் போது சாதுக்களின் சொற் பொழிவைக் கேட்கவும், வேத, வேதாந்த வாதங்களில் பங்கு பெறவும் செய்கின்றனர்.



நிகழ்வுகள்:

கும்பமேளாக்களின் முக்கியமான நிகழ்வு புனித நீராடுதல். ஒவ்வொரு முறையும் பல லட்சக்கணக்கான பக்தர்கள் இதில் கலந்து கொள்கிறார்கள். கும்ப மேளாக்களின் போது அலஹாபாத்தில் திரிவேணி சங்கமத்திலும் நாசிக்கில் கோதாவரியிலும், உஜ்ஜைனியில் ஷிப்ரா நதியிலும், ஹரித்துவாரில் கங்கையிலும் நீராடுவது மிகப் புனிதமான சடங்காக மதிக்கப்படுகின்றது.



அவ்வாறு செய்வதால் ஏழு பிறவிகளிலும் செய்த பாவங்கள் யாவும் விலகி, பிறப்பில்லா முக்தி நிலை கைவரப் பெறும் என்பது நம்பிக்கை. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் சாதாரண பக்தர்கள் மட்டுமன்றி, இமயத்தின் மறைவில் வாழும் சாதுக்களும் சன்னியாசிகளும் கூட கும்பமேளாவில் குவிவார்கள்.



அதிகாலை பிரம்ம முகூர்த்த வேளையிலேயே கூட்டமாகச் சென்று மங்கல நீராடுவார்கள். பிறகு நதிக்கரையிலேயே லிங்கம் ஸ்தாபித்து வழிபாட்டை முடிப்பார்கள். அவ்வாறு அவர்கள் லிங்கம் அமைப்பது பூஜிப்பதைப் பார்க்கவும், அவர்களுடன் புனித நீராடவும் பக்தர்கள் கூட்டம் அலை மோதும். புனித நீராடல் தவிர புராண இதிகாசங்களிலிருந்து விளக்கமளித்து சொற்பொழிவுகள், தர்க்கங்கள் இவை நடைபெற்ற வண்ணம் இருக்கும். பல இடங்களில் எந்நேரமும் சாதுக்களுக்கும், சன்னியாசிகளுக்கும், பொதுமக்கள் அன்னதானம் வழங்கியபடி இருப்பார்கள்.




சன்யாசிகள்

கும்பமேளா நடக்கும் நாட்களில் சன்யாசிகளுக்கு தவவலிமை கூடுவதாக ஐதிகம். அந்தக் கடுமையான குளிர் காலத்தலும் உடம்பில் விபூதி மட்டும் பூசியபடி கோவணம் மட்டுமே தரித்து நாக சன்னியாசிகள் நடமாடுவார்கள். அவர்களை குளிரோ, காற்றோ எதுவும்

செய்யாது. வாழ்நாள் முழுக்க மௌன விரதம் பூண்ட பரிவாஜக சன்னியாசிகளையும் நீங்கள் கும்பமேளாவில் காணலாம். இவர்கள் சிறு மணிகளை அடித்து தாங்கள் வருவதை அறிவித்து மக்களை சற்று எட்டப் போகச் சொல்வார்கள்.




ஊர்த்துவ வாஹர சன்னியாசிகள், தங்கள் உடலைக் கடுமையாக தண்டிப்பதன் மூலமாக உடல் சுகத்தை வென்று விடலாம் என்று நம்புபவர்கள். இவர்களும் பெருமளவில் இருப்பார்கள். எப்போதும் தலைகீழாக நின்று கொண்டே இருப்பவர்கள் சிரசாசன சன்னியாசிகள். இவர்கள் சிரசாசனம் செய்தபடி தியானம் செய்பவர்கள். கும்பமேளா சமயத்தில் மட்டுமே இவர்கள் நேராக நின்று வழிபடுவர். திகம்பர சாமியார்கள், திசைகளே ஆடையாகத் தரித்த நிர்வாணிகள். சுடுகாட்டு சாம்பலை உடல் முழுக்கத் திருநீறு போல் பூசிய சாமியார்களும் உண்டு. இவர்களைப் போல பலவிதமான சாதுக்களையும், சன்னியாசிகளையும் தன்பால் ஈர்க்கும் தன்மை கொண்டது கும்பமேளா.





கும்பமேளா பற்றிய வெளிநாட்டவரின் ஆய்வு.

புகழ்பெற்ற ஹார்வர்ட் பல்கலை மாணவர்கள் மற்றும் ஆய்வாளர்கள் உலகில் அதிக மக்கள் கலந்து கொள்ளும் மிகப்பெரிய விழா மகாகும்பமேளா உலகக் கோப்பை கால்பந்து போட்டிகளை விட மகா கும்பமேளா ஏற்பாடுகள் தான் சிறப்பாக செய்யப்படுகின்றன என்கின்றனர். கும்பமேளாவிற்கும் அதிக அளவில் நிதி வசூலிக்கப்படுகிறது. ஆனால் கால்பந்து போட்டிகளில் அதிக அளவில் ஊழல்களும் முறைகேடுகளும் நடைபெறுவதாகவும் மேளாவில் அதனை காணமுடியாதெனவும் கூறுகின்றனர்.



ஹார்வர்ட் பல்கலைகழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் மாணவர்கள் நிர்வாகக் குழு பணியாளர்கள் மருத்துவ பயிற்சி குழுவினர் 2013ம் ஆண்டு இந்தியாவின் அலகாபாத்தில் நடைபெற்ற மகா கும்பமேளா குறித்து ஆய்வு நடத்தி அதன் அடிப்படையில் ஒரு புத்தகம் எழுதியுள்ளனர். "கும்பமேளா : மேப்பிங் தி எபிமிரல் மெகாசிட்டி" என தலைப்பிடப்பட்டுள்ள இந்தப் புத்தகத்தில் இது தொடர்பில் பல வேறு தகவல்கள் குறிப்பிடப் பட்டுள்ளது.



ஆந்த புத்தகத்தில் அதிகபட்சமாக 390 மில்லியன் மக்கள் ஒரே இடத்தில் ஒன்று கூடி மொபைல் போன் பயன்படுத்தப்பட்டது கும்பமேளாவில் தான். இதில் ஒரு நாளில் அனுப்பப்பட்ட எஸ்.எம்.எஸ் க்கள் மற்றும் அழைப்புக்களின் எண்ணிக்கையை அடைய ஒரு மொபைல் நிறுவனம் 12 ஆண்டுகள் எடுத்துக் கொள்ள வேண்டும். 50க்கும் மேற்பட்ட நாட்கள் நடைபெற்ற இவ்விழாவில் 146 மில்லியன் எஸ்.எம்.எஸ் களும் 245 மில்லியன் அழைப்புக்களும் சென்றுள்ளன. அதிசயிக்க வைக்கும் எண்ணிக்கை யிலான மக்கள் கூடினாலும் அங்கு ஒழுக்கம் கடைப்பிடிக்கப்படுகிறது. எனவும் அந்த புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எமது பங்கு.

பல ஆயிரக்கணக்கான வருடங்கள் பாரம்பரியம் கொண்ட இந்த மஹா கும்பமேளாவை நாமும் கொண்டாடுவோம். அலஹாபாத் சென்று எல்லாராலும் கலந்துகொள்ள முடியாது. இருப்பினும் எமது அரசியல் வாதிகள் அதற்கான வசதிகளை அரசுடன் இணைந்து ஏற்படுத்தித் தரமுடியும். அதுவரை புனித நதிகளை நினைத்து அவரவர் வீட்டிலேயே. மங்கள ஸ்நானம் செய்து இறைவன் பெயர் சொல்லி கடைத்தேறுவோம். முடிந்த அளவு உண்மையான சன்னியாசிகளைத் தேடிச் சென்று அவர்களுக்கு உணவிட்டு மகிழ்வோம். இந்த நாட்களில் குளிரால் கஷ்டப்படும் ஏழைக்குப் போர்வை தானம் செய்வதும் நோயால் பீடிக்கப்பட்ட வறியவருக்கு மருத்துவ உதவி செய்வதும், தீபம் எரிய வழியில்லாக் கோயில்களுக்கு இயன்ற கைங்கரியம் செய்வதும் மிகச் சிறப்பான பலன் தரும் என்று புராணங்களில் சொல்லப்பட்டுள்ளது.


வாருங்கள்! நம்மால் இயன்ற அளவு நன்மை செய்து வாழும் நாளை பயனுள்ளதாக ஆக் குவோம். முடிந்தால் கும்ப மேளாவில் கலந்து கொண்டு புனித நீராடி மகிழ்வோம்



# அது ஒரு காலம்

## முற்பகல் செய்யின் பிற்பகல் விழையும்

### டால்ஸ்டாய்



டால்ஸ்டாய்


ஒரு நாள் சில குழந்தைகள் கணவாய் ஒன்றில் தானிய மணி போன்ற ஒரு பொருளைக் கண்டெடுத்தார்கள். அதன் நடுவே ஒரு கீற்று ஓடிக்கொண்டிருந்தது. ஆனால் அது கோழிமுட்டை அளவு பெரியதாக இருந்தது.

அவ்வழியாகப் போய்க்கொண்டிருந்த பிரயாணி ஒருவன் அந்தப் பொருளைப் பார்த்தான். ஒரு காசு கொடுத்து குழந்தைகளிடமிருந்து அவன் அதை வாங்கினான். அதை நகரத்துக்கு எடுத்துப்போய், "அதிசயப் பொருள்" என்று சொல்லி அரசனிடம் அவன் விற்று விட்டான்.

அரசன் தனது மந்திரிகளை அழைத்தான். அது என்ன பொருளாக இருக்கும் என்று கண்டுபிடிக்கும்படி சொன்னான். மதியூக மந்திரிகள் அனைவரும் யோசித்தார்கள். யோசித்து யோசித்துப் பார்த்தார்கள். அவர்களுக்குத் தலையும் புரியவில்லை, வாலும் விளங்கவில்லை. கடைசியாக ஒரு தினத்தில், அது ஜன்னல் ஓரத்தில் கிடந்த சமயம், பெட்டைக்கோழி ஒன்று உள்ளே புகுந்து அதைக் கொத்தி அதில் சிறு துவாரம் ஒன்று ஏற்படுத்தி விட்டது. அப்பொழுது, அங்கிருந்த ஒவ்வொருவருக்கும் புரிந்து விட்டது, அது தானிய மணிதான் என்று. உடனே அவ் அறிஞர் பெருமக்கள் அரசனை நாடிச் சென்றார்கள். "இது ஒரு தர்னிய மணி ஆகும்" என்று அறிவித்தார்கள்.

இதைக் கேள்வியுற்ற அரசன் அதிக வியப்படைந்தான். அத்தகைய தானியம் எப்பொழுது எங்கே விளைந்தது என்று கண்டுபிடிக்கும்படி அரசன் மதியூக மந்திரிகளுக்குக் கட்டளையிட்டான். அவ் அறிவு மணிகள் மீண்டும் ஆலோசித்தார்கள் அகப்பட்ட நூல்களில் எல்லாம் ஆராய்ந்து பார்த்தார்கள். எனினும் அதைப்பற்றி எதுவுமே புலனாகவில்லை.

ஆகவே அவர்கள் மன்னனிடம் சென்று முறையிட்டார்கள்: "நாங்கள் எவ்விதமான பதிலும் தருவதற்கில்லை. அதைப் பற்றி எங்கள் புத்தகங்களில் ஒன்றுமே இல்லை. தாங்கள் குடியானவர்களைத்தான் விசாரிக்க வேண்டும். ஒருவேளை அவர்களில் சிலர் அவர்களது தந்தையரிடமிருந்து கேள்விப்பட்டிருக்கலாம், தானியம் இந்த அளவுக்கு எந்தக் காலத்தில் எங்கே விளைந்தது என்று.



வயதாகிப் போன குடியானவன் ஒருவனை தன் முன்னே கொண்டுவந்து நிறுத்தும்படி அரசன் வேண்டினான். அவனது பணியாளர்கள் அப்படிப்பட்ட மனிதன் ஒருவனை மன்னன் முன்னால் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

முதிர்ந்து, கூன் விழுந்து, சாம்பல் போல் நிறம் வெளுத்து, பல் இழந்து காணப்பட்ட அந்த மனிதன் இரண்டு கோல்களின் ஆதரவோடு தள்ளாடி வந்து தான் ராஜாவின் திருமுன்னிலே நிற்க முடிந்தது.

அரசன் அவனிடம் அந்தத் தானியத்தைக் காட்டினான். ஆனால் அக் கிழவன் அதைச் சரியாகப் பார்க்கக்கக்கூட இயலவில்லை. எனினும் அவன் தன் கைகளில் அதை வாங்கி, தொட்டுத் தடவிப் பார்த்தான். "இத்தகைய தானியம் எங்கே விளைந்தது என்று உன்னால் சொல்ல முடியுமா, கிழவா? இதுமாதிரி தானியத்தை நீ எப்பொழுதாவது வாங்கியது உண்டா? அல்லது உன் வயல்களில் விதைத்தது உண்டா?" என்று மன்னன் கேட்டான்

அந்த வயோதிகனின் காதுகள் மந்தமாகியிருந்தன. அதனால் ராஜாவின் பேச்சை அவன் சிரமப்பட்டுத்தான் கிரகிக்க முடிந்தது. மிகுந்த சிரமத்தோடுதான் அவன் அதைப் புரிந்துகொள்ள முடிந்தது. முடிவில் அவன் அறிவித்தான்: "இல்லை. இது போன்ற தானியத்தை நான் என் வயல்களில் விதைக்கவுமில்லை, அறுக்கவுமில்லை. நாங்கள் தானியம் வாங்கிய காலத்தில், தானிய மணிகள் இப்பொழுது உள்ளதுபோல் சிறியனவாகவே இருந்தன. ஆனாலும் நீங்கள் என் தந்தையை விசாரித்துப் பாருங்கள். இந்த ரகமான தானியம் எங்கே விளைந்தது என்பதை அவர் கேள்விப்பட்டிருக்கலாம்."



எனவே அக் கிழவனின் தந்தை கண்டுபிடிக்கப்பட்டு ராஜா முன் கொண்டுவரப்பட்டான். அவன் ஒரு கோல் ஊன்றி நடந்து வந்தான்.

மன்னன் அவனிடம் அந்தத் தானியத்தைக் காண்பித்தான். அவ்வயோதிகக் குடியானவனுக்கு இன்னும் பார்வை நன்றாகவே இருந்தது. அவன் தானியத்தைக் கூர்ந்து நோக்கினான்.

"இதுமாதிரி தானியம் எங்கே விளைந்தது என்று உம்மால் சொல்ல முடியுமா, பெரியவரே? இதுபோல் நீர் வாங்கியது உண்டா? இல்லையேல் உமது வயல்களில் பயிரிட்டதாவது உண்டா? என்று அரசன் கேட்டான். அவ் வயோதிகனுக்குக் காதுகள் தெளிவாகக் கேட்காவிட்டாலும்கூட தனது மகனைவிட நன்றாகக் கேட்டுத் தெரிந்து கொள்ள முடிந்தது அவனால்.

" இல்லை. இதுபோன்ற தானியத்தை நான் எனது வயலில் விதைக்கவுமில்லை, அறுக்கவுமில்லை. வாங்குவது பற்றி சொல்லப்போனால் என் காலத்தில் பணம் என்பது பழக்கத்துக்கு வரவேயில்லை. ஒவ்வொருவனும் தனக்கு வேண்டிய தானியத்தைப் பயிரிட்டான். அவசியம் ஏற்படுகிறபோது பரஸ்பரம் பங்கிட்டுக் கொள்வதும் உண்டு. இதுமாதிரி தானியம் எங்கே விளைந்து என்று எனக்குத் தெரியாது. நாங்கள் பயிரிட்ட தானியம் இந்தக் காலத்துத் தானியத்தை விட அளவிலும் பெரிதாக இருந்தது. மாவும் அதிகமாகக் கிடைத்தது. ஆனாலும் இத்தகைய தானியத்தை நான் பார்த்ததேயில்லை. என் தந்தை காலத்தில் தானியம் ரொம்பவும் பெரியதாக விளைந்தது,

, மிக அதிகமாக மாவும் இருந்தது என்று அவர் சொல்லக் கேட்டிருக்கிறேன். நீங்கள் அவரை விசாரிப்பது நல்லது" என்று அவன் சொன்னான்.




ஆகவே ராஜா அந்தக் கிழவனின் தகப்பனைத் தேடி ஆட்களை அனுப்பி வைத்தான். அவர்கள் அவனையும் கண்டுபிடித்து விட்டார்கள். அவனும் மன்னன் முன்னால் அழைத்து வரப்பட்டான்.அவன் ஊன்றுகோலின் உதவி இல்லாமலே தாராளமாக நடந்துவந்தான். அவன் பார்வை அருமையாக இருந்தது. காதுகள் நன்றாகக் கேட்டன, பேச்சும் தெளிவாக இருந்தது.

அவனிடம் அரசன் அந்தத் தானியத்தைக் காட்டியதும் அவன் அதை வாங்கிப் பார்த்தான் தனது கையில் வைத்து உருட்டினான்.

"இப்படிப்பட்ட அருமையான தானியத்தை நான் கண்ணால் கண்டு ரொம்ப காலம் ஆகிவிட்டது" என்று சொல்லி அவன் அதில் கொஞ்சம் கிள்ளி எடுத்து வாயில் போட்டு ருசி பார்த்தான். "அதே ரகம்தான்" என்றும் சொன்னான்.

இந்த ரகத் தானியம் எங்கே எப்பொழுதும் விளைந்தது என்று சொல்லு, தாத்தா. இதுமாதிரி நீ எப்பொழுதுதாவது வாங்கியது உண்டா? ஆல்லது வயல்களில் பயிரிட்டது உண்டா?" என்று அரசன் கேட்டான்.

அம் முது பெருங் கிழவன் தெரிவித்தான்: "இது போன்ற தானியம் எனது காலத்தில் எங்கு பார்த்தாலும் விளைந்து வந்தது. எனது சின்ன வயதிலே இத்தகைய தானியத்தைத் தின்றுதான் நான் வளர்ந்தேன். மற்றவர்களை ஊட்டி வளர்த்ததும் இதுபோன்ற தானியத்தினால்தான். இந்த ரகத் தானியத்தையே நாங்கள் விதைத்தோம் அறுத்தோம் கதிர் அடித்தோம்."



நீ அதை எங்கிருந்தாவது வாங்கினாயா? அல்லது நீயாகவே பயிரிட்டு உருவாக்கினாயா? சொல்லு தாத்தா" என்று ராஜா விசாரித்தான். அம் முதியவன் புன்னகை புரிந்தான். "எனது காலத்தில் உணவுப் பொருளை விற்பனை செய்வது அல்லது விலைகொடுத்து வாங்குவது என்கிற பாபத்தைப் பற்றி எவரும் எண்ணியது கூடக் கிடையாது. பணம் எனும் விடயமாக எங்களுக்கு எதுவும் தெரியாது. ஒவ்வொருவனுக்கும் அவனுக்கே சொந்தமான தானியம் கிடைத்து வந்தது" என்றான்.


"அப்படியானால், தாத்தா உன் வயல் எங்கே இருந்தது? இதுபோன்ற தானியத்தை எங்கே பயிரிட்டாய்?" என்று அரசன் கேட்டான்.



கிழவன் பதிலளித்தான் : "கடவுளின் பூமிதான் எனது நிலம். எங்கெங்கு நான் உழுதேனோ அங்கெல்லாம் எனது வயல்தான். நிலம் தாராளமாகக் கிடந்தது. அதைத் தனது உடைமை என்று எந்த மனிதனும் சொந்தம் கொண்டாடியதில்லை. உழைப்பை மட்டுமே தங்களுக்குச் சொந்தமானது என்று மனிதர் குறிப்பிட்டு வந்தனர்".

"இன்னும் இரண்டு கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல்லு, போதும். முதலாவது, பூமி அந்தக் காலத்தில் மட்டும் ஏன் இத்தைகைய தானியங்களைத் தந்தது, இப்பொழுது ஏன் இப்படி விளைச்சல் தருவதில்லை? இரண்டாவதாக, உனது பேரன் இரண்டு கோல்கள் ஊன்றி நடப்பானேன் உன் மகன் ஒரு கோலின் துணையோடு நடப்பது ஏன்? நீ மாத்திரம் கோல் எதுவும் இல்லாமல் நடப்பது எதனால்? உனது கண்கள் ஒளி நிறைந்து உள்ளன. உன் பற்கள் வலிவுடன் இருக்கின்றன. உனது பேச்சு தெளிவாகவும் காதுக்கு இனிமையாகவும் இருக்கிறது. இதெல்லாம் எப்படி நேர்ந்தது?" என்று ராஜா கேட்டான்.

"இவையெல்லாம் இவ்வாறு ஏற்பட்டிருப்பதன் காரணம் என்னவென்றால் தங்கள் உழைப்பைக்கொண்டே வாழும் வழக்கத்தை மக்கள் இழந்து விட்டார்கள். மற்றவர்களின் உழைப்பை நம்பி வாழப் பழகிக் கொண்டார்கள். அந்தக் காலத்தில், மனிதர்கள் கடவுளின் கட்டளைப்படி வாழ்க்கை நடத்தினார்கள்.



தங்களுக்கு உரியது எதுவோ அதைக்கொண்டு திருப்தி அடைந்தார்கள் மற்றவர்கள் உற்பத்தி செய்ததை அபகரிக்க வேண்டும் என்று அவர்கள் ஆசைப்பட்டதில்லை." இப் படி விளக்கம் கொடுத்தான் அந்தக் கிழவன்.

******************************************
******************************************

# லிங்கோற்பவர்

சிவனடியார்களே! கடந்த இதழிலிருந்து 64 சிவ மூர்த்தங்களையும் உங்களுக்கு அறிமுகப்படுத்தி அதன் பெருமைகளை உணர்த்த எண்ணினோம். பெருகிவரும் தனிமனித வழிபாடுகளை களைந்து சிவனின் பால் உங்கள் சிந்தையை திருப்புவதற்கான ஒரு சிறிய முயற்சியில் கடந்த இதழில் "லிங்க மூர்த்தி" வடிவத்தை பற்றி விளக்கினோம் இவ்விதழில் லிங்கோற்பவர் பற்றி தருகிறோம். வாசித்து பயனடையுங்கள்.



சிவனின் 64 வடிவங்களில் லிங்கோத்பவரும் ஒருவரே. கருவறையின் பின்புறம் லிங்கோத்பவர் இருப்பார். இவரது தோற்றத்தை உற்று நோக்கினால் செங்குத்து வடிவிலான கண் போன்ற அமைப்பின் நடுவில் இருப்பதை காணலாம். லிங்கோத்பவரை வணங்கினால் அறிவும் உண்மை பேசும் திறனும் வளரும்.

லிங்க பாணத்தின் நடுவில், சந்திரசேகர் திரு மேனி போல் அமைந்திருப்பதே லிங்கோத்பவ வடிவம். இதில், திருமுடியும் திருவடியும் மறைக்கப்பட்டிருக்கும். இரண்டு, நான்கு அல்லது எட்டுக் கரங்களுடன் சிவனார் திகழ... பிரம்மாவும் திருமாலும் இருபுறமும் வணங்கிய நிலையில் இருப்பர். சிவாலயங்களில் கருவறைக்குப் பின்புறச் சுவரில், லிங்கோத்பவ மூர்த்தியை அமைக்கும் வழக்கம், முதலாம் பராந்தக சோழன் காலத்திலேயே இருந்துள்ளது. லிங்கத்தின் நடுவில் சிவபெருமானும், மேல் பகுதியில் அன்ன பட்சியாக பிரம்மனும், கீழ்ப்பகுதியில் வராகமாக திருமாலும் உள்ள லிங்கோத்பவ வடிவை பல கோயில்களில் காணலாம்.



பஞ்ச பூதங்களின் ஒவ்வொரு அணுவிலும் நிறைந்துள்ளார் இறைவன். பஞ்ச பூதங்களில் காற்று, நீர், ஆகாயம் ஆகியவற்றை ஒரு வடிவத்துக்குள் கொண்டு வர இயலாது. ஆனால், மண்ணை ஒரு வடிவமாக உருவாக்கலாம். ஆனால் அது, ஒளி உடையது ஆகாது! சோதியுருவை, கண்ணால் காணலாம். கொழுந்து விட்டு எரியும் தீயில்... அதன் மையத்தை உற்று நோக்கினால், நீள் வட்ட வடிவத்தில்- நீல நிற பிரகாசத்தைக் காணலாம். இதையே லிங்கமாக்கினர் நம் முன்னோர். இதுவே லிங்கோத்பவ மூர்த்தி!



## புராணக் கதை

### லிங்கோத்பவர் திருவடிவம்

ஒருமுறை, சரஸ்வதியின் நாயகன் பிரம்மனுக்கும் திருமகளின் நாயகன் மகாவிஷ்ணுவுக்கும் இடையே, "தங்களில் யார் பெரியவர்?" என்று விவாதம் எழுந்தது. நெடுநேரம் விவாதித்தும் தீர்வு கிடைக்கவில்லை.

இந்த சர்ச்சை பெரிய யுத்தமாக மாறியது. இருவருக்கும் இடையே ஒளி பொருந்திய பெரிய நெருப்புத் தூணாக சிவபெருமான் நின்றார். பிரம்மனும் விஷ்ணுவும் தங்களது சண்டையை விட்டு விட்டு, கோடி சூரிய பிரகாசத்துடன் திகழ்ந்த அந்த நெருப்புத் தூணை ஆச்சரியத்துடன் பார்த்தனர். அப்போது, ""ஒளி உருவில் உயர்ந்து நிற்கிறேன். உங்களில் ஒருவர் என் திருவடியையும் மற்றொருவர் என் திருமுடியையும் காண்பதற்கு முயற்சியுங்கள். அதன் பிறகு, உங்களது விவாதத்துக்கு முடிவு சொல்கிறேன்!"" என்றார் சிவபெருமான்.

இதையடுத்து, வலிமையான கொம்புகள் கொண்ட வராகமாக உருவெடுத்தார் திருமால். பூமியை அகழ்ந்து பாதாளத்துக்கும் கீழே சென்று, ஈசனின் பாதமலரைக் காண முற்பட்டார். பிரம்மனோ, அன்னப் பறவையாகி சிறகுகளை விரித்துப் பறக்கத் துவங்கினார்... ஈசனின் திருமுடியைக் காண!

ஆண்டுகள் பல கடந்தன. இருவரும் களைப்புற்றனர். திருவடியைக் காண முடியாமல் திரும்பினார் திருமால். ஆனால், தோல்வியை ஏற்றுக் கொள்ள முடியாமல் தவித்தார் பிரம்மன். அந்த வேளையில், தாழம்பூ ஒன்று வேகமாக கீழ் நோக்கி வருவதைக் கண்டார். அதனிடம், ""எங்கிருந்து வருகிறாய்?"" எனக் கேட்டார். "சிவபெருமானின் திருமுடியில் இருந்து விழுந்து கொண்டிருக்கிறேன். அவரின் திருமுடியைக் காண்பது, உங்களால் இயலாத காரியம்!"" என்றது தாழம்பூ. உடனே பிரம்மன், ""எனக்கு ஓர் உதவி செய்ய வேண்டும். ஒளிப் பிழம்பின் திருமுடியைக் கண்டதாகவும், அங்கிருந்து உன்னை எடுத்து வந்ததாகவும் சொல்வேன். நீ அதை ஆமோதித்தால் போதும்!"" என்றார். தாழம்பூவுடன் பூமிக்குத் திரும்பிய பிரம்மன், தான் திருமுடியைக் கண்டதாகவும் அதற்கு சாட்சியாக திருமுடியிலிருந்து தாழம்பூவை எடுத்து வந்ததாகவும் சிவனிடம் தெரிவித்தார். (தோடர்ச்சி 13 ம் பக்கம்)

# எமது தேவை: இளைஞர்களிடம் சமய, சமூக, அரசியல் வழிப்புணர்வு.

இன்று எமது இளைஞர்கள் அதிக அளவில் தற்கொலை செய்வதையும், சமூக விரோத செயல்களில் ஈடுபடுவதையும், எவ்விதமான முயற்சியின்றி வாழா இருப்பதையும், உறவினர்களின் வெளிநாட்டு உழைப்பில் மிகப் பெரிய மோட்டார் வண்டிகளும், நாகரிகம் எனும் போர்வையில் அரைகுறை ஆடைகளும், கற்றறிந்த இளைஞர்களும் நல்ல வேலையிலிருந்தாலும் சீதனம் எதிர்பார்த்து உரிய வயது தாண்டியும் திருமணம் முடிக்காமை என குறைபாடுகளை அடுக்கிக் கொண்டே போகலாம். எனினும் சிறந்த இளைஞர் கழகங்களில் சேர்ந்து மிகப் பெரிய முன்னுதாரணமான நடவடிக்கைகளை செய்யும் இளைஞர்களும் இல்லாமலில்லை. எனினும் ஒப்பீட்டளவில் இவ்வாறானவர்கள் மிகக் குறைவென்றே சொல்ல வேண்டும். எது எப்படியோ ஒட்டு மொத்தமாக பார்க்கையில் இன்று எமது இளைஞர்களிடத்தில் சமய,சமூக, அரசியல் சார் விழிப்புணர்வு மற்றும தேசாபிமானம் என்பது மிக மிகக் குறைவு என்பது தெளிவு.

இளைஞர்களின் இவ்வாறான போக்கிற்கு தனியே அவர்களை மட்டும் குறை கூறிப் பயனில்லை. இன்றைய இளைஞர்களினை அவர்களின் கல்வி மற்றும் தொழில் வாய்ப்பு என்பவற்றை மட்டும் வைத்து தரம் பிரிக்கும் மன நிலை எம்மிடையே காணப்படுகிறது. உண்மையில் தனிநபர்களிடம் ஏதேனும் குறை இருந்தாலும் கூட அவர்களின் தேசபக்தி, சமய, சமூக பிரக்ஞை பிரமிக்கத்தக்க வகையில் இருப்பின் அதுவே அவர்களின் உயர்வான தன்மை என விளம்ப முடியும். சமூக - தேசாபிமான விடயங்களில் அவர்களின் பார்வை செம்மையும், ஆழ்ந்த ஞானமும், தீவிரத்தன்மையும், நாட்டின் வளர்ச்சி-முன்னேற்றத்தில் ஆர்வமும் கொண்டிருக்கும் பட்சத்தில் அவர்களையும் உயர்ந்தவர்களாக கருதமுடியும். இவ்வாறான முன்னுதாரணம் மிக்க இளம்தலைவர்கள் செயற்பாட்டாளர்களாக மாறும் போது எமது எதிர் பார்ப்புக்கள் இலகுவில் நிறைவேறும்.

ஆனால் இன்று இவர்கள் முன் இருக்கும் தலைவர்கள் எவ்வாறு இருக்கிறார்கள் என்று நோக்கின், சமய, சமூக, அரசியல் பார்வை மற்றும் அக்கறையில் மிகவும் பின் தங்கிய அரசியல்கட்சி பிரமுகர்களும், தான் உண்டு தனது பணியுண்டு என இருக்கும் மனிதர்களையுமே பார்க்க முடிகிறது. மேலும் சிலர் உயர்வான சமய சமூக பணிகளினூடாக வெற்றி பெற்ற பின் தம்மை இறைவனுக்கு நிகரானவர்களாக காட்ட முனைகின்றனர். இவர்களை முன்னிறுத்தி எவ்வாறு இளைஞர்கள் திறம்பட செயற்பட முடியும்.

ஆகவே இந்நிலை மாற்றி ஒரு பொறுப்பு வாய்ந்த இளைஞர் சமூகத்தை உருவாக்க இளைஞர்கள் தான் முன்வர வேண்டும். தலைமையின் ஒரு முக்கிய குணமான சுயநலமில்லா கனல் தெறிக்கும் தேசப்பற்றும், சமூக அக்கறையும் கொண்ட இளைஞர்கள் அதிகம் அதிகம்பேர் ஒன்று சேர்ந்து பணியாற்றுவதன் மூலம் இதனை ஏற்படுத்தலாம். இளைஞர்களிடம் வேகமும், வீரியமும், செயல்திறனும் பொதுவாகவே அதிகமாக இருக்கும். அவர்களிடம் போதிய மனப்பக்குவம் இருக்காதே என்ற ஒரு வாதம் வைக்கப்படலாம். நான் பெரியவர்களின் ஆலோசனைகளை கேட்க மாட்டேன் என அடம்பிடிக்கும் இளைஞர்கள் அடிப்படையிலேயே தகுதியற்றவர்கள். ஆக முதிர்ந்த ஞானம் கொண்டவர்களின் ஆலோசனையில் சமூகத்தின் தேவைகளை வேகமாக முன்னெடுக்க தயாராக உள்ள இளைஞர்களே இதற்குப் பொருத்தமானவர்கள், இது நடைமுறை சாத்தியமும் கூட. இயல்பான சமூக அக்கறை, தேசபக்தியும், சமுதாய பிரச்சனைகளில் தெளிந்த சிந்தனையும் கொண்டவர்களே பிற்காலத்தில் தலைவர்களாக உருவாகிறார்கள், சாதாரண மனிதர்களிடம் ஈர்ப்பை உருவாக்குகிறார்கள். அப்படி ஈர்ப்பை ஏற்படுத்த முடியாதவர்கள் தலைமை என்ற வார்த்தைக்கு தகுதியற்றவர்கள். எனவே இப்போதே எமது இளைஞர்க்ள சமய சமூக அரசியல் விழிப்புணர்வு பெற திறன்மிகு இளைஞர்களே உதவ வேண்டும்.

## 64 சிவ வடிவ விளக்கக்கதை

12 ம் பக்கத் தொடர்ச்சி..........................

பிரம்மன் கூறுவது பொய் என்பதை அறிந்த சிவனார் கோபம் கொண்டார். ““பிரம்மனே... பொய்யுரைத்த உனக்கு, கோயில்களும் பூஜைகளும் இல்லாமல் போகட்டும். தாழம்பூ, இனி எந்த பூஜைக்கும் பயன்படாது!““ என்று சபித்தார்.

தவறு உணர்ந்த பிரம்மனும் தாழம்பூவும் தங்களை மன்னிக்கும்படி சிவபெருமானிடம் வேண்டினர். இதன் பலனால்... “சிவ பூஜை தவிர, மற்ற பூஜைகளுக்கு தாழம்பூ பயன்படும்!“ என்று அருளினார் சிவனார். இப்படி பிரம்மன், திருமால் இருவரது அகந்தையையும் போக்கி... சிவபெருமான், உலகுக்குத் தனது பேரொளியைக் காட்டிய திரு வடிவே லிங்கோத்பவ மூர்த்தி!

இந்தப் புராணக் கதையில் உள்ள நுண்ணிய கருத்து சிந்தனைக்குரியது. பிரம்மன் அறிவு வடிவானவர். திருமால் செல்வத்தின் நாயகர். அறிவும் செல்வமும் அகந்தையை அதிகப்படுத்தும். ஆனால் அறிவு, செல்வம் ஆகியவற்றால் இறைவனைக் காண முடியாது! செல்வச்செருக்கு, இறுதியில் தனது தோல்வியை ஏற்றாலும் கல்விச் செருக்கு தனது தோல்வியை ஏற்கவில்லை. மாறாக, தோல்வியை மறைப்பதற்கான சூழ்ச்சியைத் தேடியது. ஆம், அறிவு கூடியதால் அகந்தை கொள்பவர்கள் பொய் சொல்லவும் அஞ்ச மாட்டார்கள் என்ப தையே இந்தக் கதை விளக்குகிறது.

#############################

# ஆதிசங்கரர்


கேரளத்தை இராஜசேகரன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். பூர்ணா நதிக் கரையில் சுயம்புலிங்கம் ஒன்றைக் கண்டு அங்கே கோயில் கட்டினான்.
ஈசனின் காலடி பட்ட இடமாதலால் இவ்வூரைக் காலடி என்றே அழைப்போம்!
காலடி புண்ணிய பூமியில் சிவகுரு - ஆர்யாம்பா இருவரும் வாழ்ந்து வந்தனர். சிவ பக்தரான சிவகுருவுக்கு பிள்ளை இல்லாத குறை பெரும் குறையாக இருந்தது.
திருச்சிவப் பேரூர் வடக்கு நாதனைத் தரிசித்து வரலாமா?
அப்போதேனும் நம் குறை தீருமா என்று பார்ப்போம்!
சிவகுருவும் ஆர்யாம்பாவும் திருச்சிவப் பேரூர் சென்று நாற்பது நாள் விரதம் இருக்கிறார்கள்.
அன்று இரவு கனவில்...
சிவகுரு! உனக்கு அறிவுடன் ஆயுள் குறைந்த ஒரே மகன் வேண்டுமா? ஆயுளும் அறிவுமில்லாத பல பிள்ளைகள் வேண்டுமா?
சிவகுரு விழித்துக் கொண்டார். மனைவியை அழைத்துக் கனவைச் சொல்கிறார்.
கவலைப்படாதீர்கள். பகவான் நமக்கு எதை அளிக்க வேண்டும் என்று அறிவார்!


வசந்த காலம், வைகாசி மாதத்தில் சுக்ல பஞ்சமியில் ஆர்யாம்பா ஆண் குழந்தையைப் பெற்றெடுக்கிறாள்.
குழந்தைக்குச் சங்கரன் என்று பெயரிடலாமா?
ஆகா! சங்கரன் அழகான பெயர்.
மூன்று வயது சங்கரன் விளையாட்டுச் சாமான்களை எடுக்காமல் கையில் சுவடிகளை எடுக்கிறான்.
ஆர்யா! நம் சங்கரனுக்குப் படிப்பிலே எவ்வளவு ஆர்வம் பார்த்தாயா?
பாலகன் சங்கரன் மூன்று வயதிற்குள் காவியங்களையும் புராணங்களையும் கற்றுத் தேர்கிறான்.
சங்கரனின் நான்காம் வயதில் அருமைத் தந்தை சிவகுரு சிவகதி அடைகிறார். ஆர்யாம்பா பாலகனுடன் துக்கமும் தனிமையுமாக வாழ்கிறாள்.
ஐந்தாம் வயதில் முறைப் படி சங்கரனுக்கு உபநயனம் செய்விக்கிறாள் ஆர்யாம்பா.
குருகுல வாசம் செய்கிறான் சங்கரன். அவனுடைய பேரறிவைக் கண்டு குரு பெருவியப்பு அடைகிறார்.
இந்த சங்கரன் யார்? என்னை விட அறிவில் உயர்ந்து விளங்கும் இவன் வேதங்களை அறிந்த பிரம்மாவோ? சடங்குகளுக்கு வடிவமைத்த ஜைமினி மாமுனியோ? தத்துவத்தைக் கரைகண்ட பாதராயணரோ?

# இந்து சமயத்திற்கோர் அறிமுகம்

பாகம் - 08 சற்குரு போதிநாத வேலன் சுவாமிகள்

இந்து சமயத்திற்கோர் அறிமுகம் என சற்குரு போதிநாத வேலன் சுவாமிகளின் தொடர் இம்முறையோடு நிறைவிற்கு வருகின்றது. சுவாமிஜி யின் அருள் உங்கள் அனைவருக்கும் கிடைக்கட்டும்.

டாக்டர் எஸ். ராதாகிருஸ்ணன், பிரபல தத்துவவாதியும் இந்தியாவின் குடியரசுத் தலைவராகவும் 1962 இல் இருந்து 1967 வரை இருந்தவர், தனது "இந்துவின் பார்வையில் வாழ்க்கை" என்பதில் சுருங்கச் சொல்வதாவது: □இந்து அங்கீகரிப்பது ஒரே உச்ச பொருள், ஆன்மா, பல்வேறு பெயர்கள் அதற்கு கொடுக்கப்பட்டாலும். கடவுள் உலகத்தில் இருக்கின்றார், உலகமாக இல்லாவிட்டாலும். வெறும் இடைச்செயலாக உயிரை அல்லது உணர்வைப் படைப்பது என இல்லாமல், சதா கணமும் தொழில் புரிகின்றார். இயற்கை மற்றும் இயற்கை கடந்த எனும் இருமை கிடையாது. தீங்கு, தவறுகள், அவலட்சணம் ஆகியன உச்சம் அல்ல. எந்த ஒரு கருத்தும் முழுத் தவறு ஆகாது, எந்த மனிதனும் தீர்க்கமாக தீயவனாகி கடுமையாக கண்டிக்கத்தக்கவனல்ல. நரகம் ஒன்று இல்லை, அப்படி இருந்தால் கடவுள் இல்லாத ஓரிடம் இருப்பதாக பொருளாகும். கடவுளின் அன்பை மீறியவை பாவமாகும். கர்ம வினை சட்டம் சொல்வதாவது, தனிமனித வாழ்க்கை ஒரே தவணையல்லாமல், தொடர் நிகழ்ச்சி. ஒரே தொடர்ந்த நகர்வில் சுவர்க்கமும் நரகமும் உயர்ந்த அல்லது தாழ்ந்த தளங்களாகும். ஒவ்வொரு வகையும் தனக்கென ஒரு தன்மையை பின்பற்ற வேண்டியது உண்டு. நாம் இருப்பதாகக் கூறப்படும் வாழ்க்கை நிலையில் நமது பொறுப்பை ஆற்ற வேண்டும். இந்து மதம் உறுதியுடன் சொல்வதாவது, மத அனுபவங்களால் தெய்வ வெளியீடு நிச்சயம் வேறுபடும், அனைத்து நம்பிக்கை வகைகளும் ஏற்றுக் கொள்ளப்படும், ஒரே குறியை நோக்கி ஒவ்வொருவனும் தன் பாதையில் வழிகாட்டப்படுகின்றான். இவையே இந்து மதத்தின் சில மைய கோட்பாடுகள். இவற்றால்தான் இன்றும் இந்து மதம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

-முற்றும்-



# அறிந்து கொள்வோம் ஆயிரம்

பன்னிரண்டு ஜோதி லிங்கங்கள்

1. சோமநாதேசுவரர்- சோமநாதம் (குஜராத்)
2. மல்லிகார்ச்சுனர்-ஸ்ரீசைலம் (ஆந்திரா)
3. மகா காளேசுவரர்-உஜ்ஜயினி (மத்தியபிரதேசம்)
4. ஓம்காரம் மாமலேசுவரர்- ஓம்ஹாரம் (மத்தியபிரதேசம்)
5. வைத்திய நாதேசுவர்-பரளி (மகரா'டிரம்)
6. பீமாநா தேசுவர்- பீமசங்கரம் (மகரா'டிரம்)
7. இராம நாதேசுவரர்-இராமேஸ்வரம் (தமிழ்நாடு)
8. நாக நாதேசுவரர்-நாகநாதம் (மகரா'டிரம்)
9. விசுவ நாதேசுவரர்-காசி (உத்திரப்பிரதேசம்)
10. திரியம்ப கேசுவரர்- திரியம்பகம் (மகாரா'டிரம்)
11. கேதாரேசுவரர்-இமயம் (உத்திரப்பிரதேசம்)
12. குருணேசுவரர்-குண்ருனேசம் (மகாரா'டிரம்)

பஞ்சபூதத் தலங்கள்

உலகம் பஞ்ச பூதங்களால் ஆனது. மண், நீர், தீ, வளி,வான், என்பன ஜம்பூதங்கள். இவை பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்று கூறப்படுகின்றன. இவற்றைப் பற்றித் தெளிவாகவும் நுட்பமாகவும் உணர்ந்த நமது பெரியோர்கள் ஒவ்வொரு பூதத்தின் பெயராலும் ஒரு தலத்தை ஏற்படுத்தி உள்ளனர். அவை பஞ்சபூதத் தலங்கள் எனப்படும். அந்த தலங்கள் அமைந்துள்ள இடங்கள்.

மண் (பிருத்திவித்தலம்) - காஞ்சிபுரம், திருவாரூர்.
நீர் (அப்புத்தலம்) -திருவானைக்கா.
தீ (தேயுத்தலம்) - திருவண்ணாமலை.
வளி (வாயுத்தலம்)- திருக்காளத்தி.
வான் (ஆகாயத்தலம்)- சிதம்பரம்.

ஐந்து தாண்டவங்கள்

தில்லை - ஆனந்த தாண்டவம்.
திருவாரூர் - அசபா தாண்டவம்.
மதுரை - ஞானசுந்தர தாண்டவம்.
அவிநாசி - ஊர்த்தவ தாண்டவம்.
திருமருகன் பூண்டி - பிரம தாண்டவம்.

ஐந்து மன்றங்கள்

இறைவன் நடராசத் திருமேனி கொண்டு அருட்கூத்து இயற்றுகின்ற தலங்களில் முக்கியமானவை என்று ஐந்தினைக் கூறலாம்.அந்த ஐம்பெரும் மன்றங்கள் (அடைப்புக் குறிக்குள் சபைகள்) அமைந்துள்ள இடங்கள் கீழே...

தில்லை - பொன் மன்றம் (கனக சபை).
திருவாலங்காடு - மணி மன்றம் (இரத்தின சபை).
மதுரை - வெள்ளி மன்றம் (இராஜ சபை).
திருநெல்வேலி - செப்பு மன்றம் (தாமிர சபை).
திருக்குற்றாலம் - ஓவிய மன்றம் (சித்திர சபை).

சத்த விடங்கத் தலங்கள்

வடமொழியில் "டங்கம்" என்பது உளியைக் குறிக்கும். விடங்கம் என்றால் உளியால் செதுக்கப் பெறாத என்று பொருள். ஏழு திருத்தலங்களில் சிவபெருமான் விடங்கராக வீற்றிருக்கிறார்.அந்த ஏழு திருத்தலங்கள் அமைந்துள்ள இடங்கள் கீழே... (அடைப்புக் குறிக்குள் இறைவனின் நடனம்)

திருவாரூர் - வீதிவிடங்கர் (அசபா நடனம்).
திருநள்ளாறு - நகரவிடங்கர் (உன்மத்த நடனம்).
திருநாகைக் கோரணம் என்கிற நாகபட்டிணம் - சுந்தரவிடங்கர் (வீசி நடனம்).
திருக்காறாயில் என்கிற திருக்காரைவாசல் - ஆதிவிடங்கர் (குக்குட நடனம்).
திருக்கோளிலி என்கிற திருக்குவளை - அவனிவிடங்கர் (பிருங்க நடனம்).
திருவாய்மூர் - நீல விடங்கர் (கமல நடனம்).
திருமறைக்காடு என்கிற வேதாரண்யம்- புவனி விடங்கர் (கம்சபாத நடனம்)

முக்தி தரவல்ல தலங்கள்

முக்தி தரவல்ல தலங்கள் என்று நான்கு தலங்கள் உள்ளது.
திருவாரூர் - பிறக்க முக்தி தருவது
சிதம்பரம் - தரிசிக்க முக்தி தருவது
திருவண்ணாமலை - நினைக்க முக்தி தருவது
காசி - இறக்க முக்தி தருவது

### "வறுமையின் பிடியில் சிக்கிய மக்களை தரகர்கள் இலக்கு வைக்கிறார்கள்



மலையகத்தில் வறுமையில் பிடியில் வாடும் தோட்டத் தொழிலாளர்களை குறிவைத்து சட்டவிரோத சிறுநீரக வியாபாரத்தில் சிலர் ஈடுபட்டுவருவதாக அமைச்சர் வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். மலையக மக்களை இலக்குவைத்து இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகள் நடந்து வருவதை சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன ஏற்கனவே உறுதி செய்திருப்பதாகவும் இவ்வாறான சிறுநீரக வியாபாரத்தில் "தரகர்கள்" ஈடுபட்டிருப்பதாகவும் அவர்களால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களுக்கு நேர்ந்துள்ள நிலைமை பற்றி வெளியில் கூற அச்சப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பல நூற்றாண்டுகளாக வறுமையில் வாழும் எம் மக்களை பல்வேறு இன்னல்களும் துரத்துவது கொடுமையே.

### இந்து பிரசார மையத்தினரால் "சிவபூமி" ஆன்மீக சஞ்சிகை வெளியீடு!



இந்து பிரசார மையத்தினரால் "சிவபூமி" ஆன்மீக சஞ்சிகை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இந்துக்களை மீண்டும் மாபெரும் சக்தியாக ஒன்று திரட்டி அவர்களின் நல் வாழ்வை மேம்படுத்தும் நோக்கில் இது மாதம் தோறும் வெளியிடப்படவுள்ளது. இச்சஞ்சிகையின் முதலாவது வெளியீட்டு விழா கடந்த 06.12.2015 அன்று இந்து பிரசார மையத்தினரால் கொழும்பு புதிய கதிரேசன் வீதியில் அமைந்துள்ள விஸ்வ கர்மா மண்டபத்தில் நடைபெற்றது.

### தமிழ் மக்கள் எதிர் நோக்கப்போகும் சனத்தொகைப் பிரச்சினை.



எதிர் காலத்தில் தமிழ் மக்கள் சனத்தொகைப் பிரச்சினையை எதிர் நோக்கவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். கிழக்கு மாகாணத்தில் அண்மையில் 10 குடும்பங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் தமிழ் மக்கள் 18 குழந்கைகளையும், சிங்களக் குடும்பங்கள் 26 குழந்தைகளையும், முஸ்லீம் குடும்பங்கள் 36 குழந்தைகளையும் பெற்றெடுக்கிறார்கள். இந்நிலை நீடித்தால் தமிழர் தம் சனத்தொகை எதிர்காலத்தில் என்ன நிலையாகும் என எண்ணிப் பாருங்கள். என அவர் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

### தமிழ் சிறுமியை இஸ்லாமிய மதம் மாற்றி திருமணம் செய்ய முயற்சித்தவர் கைது.

குணரத்தினம் சஞ்சீவினி என்ற 15 வயது சிறுமியை திருகோணமலையை சேர்ந்த திருமணமான முஸ்லிம் நபர் ஒருவர் பேருந்தில் அழைத்துச் சென்று சிறுமியை மதம் மாற்றி திருமணம் செய்ய முயற்சித்த நிலையில் உறவினர்களால் திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் கொடுக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையிலேயே சிறுமி மீட்கப்பட்டுள்ளார்.

### தமிழ் பாடசாலைகளை ஒன்றிணைத்து புதிய கல்வி வலயமொன்றை அமைக்கவும்.



கல்முனை, சம்மாந்துறை ஆகிய கல்வி வலயங்களிலுள்ள தமிழ் பாடசாலைகளை ஒன்றிணைத்து புதிய கல்முனை மத்திய கல்வி வலயம் ஒன்றை ஏற்படுத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் மு.இராஜேஸ்வரன் தனிநபர் பிரேரணை ஒன்றை சபையில் முன்வைத்து உரையாற்றினார். கல்முனை கல்வி வலயத்தில் 22 தமிழ் பாடசாலைகளும், சம்மாந்துறை கல்வி வலயத்தில் 32 தமிழ் பாடசாலைகளும் உள்ளன. அப்பாடசாலைகளில் 16,785 தமிழ் மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். 1108 ஆசிரியர்கள் கல்விப்பணியாற்றுகின்றனர்.

இந்நிலையில் இப்பாடசாலைகளில் நிர்வாக ரீதியாக பௌதிக வளப்பங்கீடு, ஆசிரியர் இடமாற்றம் மற்றும் ஏனைய விடயங்களில் பாரபட்சம் காட்டப்படுகின்றது. அதற்காக நிலத் தொடர்பற்ற வகையில் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் உருவாக்கப்பட்டதைப் போன்று தனியான ஒரு கல்வி வலயம் உருவாக்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கையை மாகாண கல்வியமைச்சு முன்னெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.



### தமிழ் பெண்ணை ஏமாற்றிய முஸ்லிம் நபர்!

யாழ்.குடாநாட்டிலிருந்து பெண்களை காதலிப்பதாக கூறி அழைத்துச் சென்று பெண்களின் கற்பையும்,நகைகளையும் சூறையாடிய முஸ்லிம் நபர் பொதுமக்களால் மடக்கி பிடிக்கப்பட்டு கட்டிவைத்து நையப்புடைக்கப்பட்டுள்ளார். குறித்த சம்பவம் யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

### ஈழ மண்ணின் வீர தியாகத்தை மகாகாவியம் ஆக்குவேன்! வைரமுத்து



முல்லைத்தீவில் வடமாகாண விவசாய அமைச்சின் 2016 ஆம் ஆண்டுக்கான உழவர் பெருவிழா முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்புரையாற்றிய தமிழகத்தின் பிரபல கவிஞரும் பாடலாசிரியருமான வைரமுத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். தமிழ் மண்ணை நான்தொட்டு வணங்குகிறேன். இந்த மண்ணைத் தொழுகின்றபோது எனக்கு என்ன உணர்வு வந்ததென்று ஆயிரம் சொற்களால் எழுதிவிடமுடியாது. முதன்முதலில் மண்ணில் விழும் மழைத்துளிக்கு ஒரு சிலிர்ப்பு வரும், மண்ணுக்கு ஒரு உயிர்ப்பு வரும். முதல் முத்தம் பெறும்போது உயிருக்குள் பூப்பூக்கும். குழந்தைக்கு முதலில் இரத்தம் சொட்டும்போது தாயின் இதயம் துடிக்கும் துடிப்பு போன்றே இந்த மண்ணை நான் தொட்டபோது உணர்ந்தேன. வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் போன்ற ஊர்களின் பெயர்கள் எல்லாம் வெறும் பெயர்கள் அல்ல. அவை சரித்திரத்தில் இடம் பெறும் குறிப்புக்களாகவே இந்த உலகம் உணர்ந்திருக்கிறது என்றார். நிகழ்வில் வட மாகாண முதல்வர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஜோதிடம் கற்றுக்கொள்ளலாமா? பாகம் - 07


தருவது : சிவ சுதர்சனன்

வழிகாட்டலும் ஆலோசனையும்:
தேசகீர்த்தி கிரியாஜோதி,ஜோதிடக் கலாமணி
சிவஸ்ரீ ஜி.என்.திருக்கோணேஸ்வரக்குருக்கள(J.P)(PIMP)

நாம் இந்த இதழில் தெரிந்து கொள்ளப் போவது விருட்சங்களை பற்றி. நாம் பிறந்த நட்சத்திரங்களுக்கும், ஒரு சில விருட்சங்களுக்கும் நேரடி தொடர்பு உண்டு. மனிதனாய் பிறந்த அனைவருக்கும் , ஏதாவது ஒரு வகையில் பிரச்னைகள் இருந்து கொண்டு தான் இருக்கும். சிலருக்கு விஸ்வ ரூபம் எடுக்கும். சிலருக்கு, பணம், சிலருக்கு நோய், சிலருக்கு குடும்பம் , இது சகலருக்கும் பொருந்தும்.. பிரச்சினை இல்லாதவர்கள் குழந்தைகள் மட்டுமே. இல்லையேல் அவர்கள் ஞானிகள்.

பந்தம், பாசம் அற்று இருக்க வேண்டும். இல்லையேல் ஒன்றும் அறியாத குழந்தையாய் இருத்தல் வேண்டும். தன்னை அறிவதே வாழ்க்கை. நாம் இந்த பிறவியில் எந்த நோக்கத்திற்காக பிறந்து இருக்கிறோம், அனைத்தும் ஒடுங்கி அந்த பரம்பொருளில் இணைவதே முடிவில் வாழ்க்கை என்று தெரிய வரும். ஜோதிடம் என்பது அந்த வகையில் ஒரு கருவி நமக்கு. நாம் சென்ற பிறவியில் நல்லவனாய் இருந்தோமா? இந்த பிறவியில் எப்படி இருப்போம்..? நமக்கு எப்போது நேரம் நல்லபடியாக இருக்கும்? எப்போது கடுமையாக இருக்கும்? என்று பல விதங்களில் உங்களுக்கு வழி காட்டும். ஜோதிடம் படிக்க, படிக்க , நாம் நம்மை அறியாமலேயே நிறைய ஜாதகங்களை தெரிந்தவர்களை, பிரபலங்களை அலசி ஆராய்வோம். அது பல விதங்களில் உங்களுக்கு நன்மைகள் செய்யும். பல சூட்சுமங்களை நமக்கு உணர்த்தும். நம்மை அறியாமல் நாம் செய்யும் பாவங்களை, பாவ கதிர்களை கிரகிக்கும் சக்தி விருட்சங்ளுக்கு உண்டு.

உங்கள் நட்சத்திரத்துக்குரிய மரத்தை , நீங்களே உங்கள் கையால் நட்டு, நீருற்றி வளர்த்து வாருங்கள். அந்த மரம் வளர வளர உங்கள் வாழ்வும் வளம் பெறும். உங்கள் பாவக் கதிர்களை கிரகித்து, உங்களுக்கு அற்புதமான ஒரு ஆன்ம தொடர்பை இந்த மரங்கள் செய்யும். சில மரங்களை வீட்டில் வளர்க்க முடியாது.. உங்கள் கண் படும் இடங்களில், உங்கள் தோட்டத்திலோ, சாலை ஓரங்களிலோ, இல்லை ஆன்மிக ஸ்தலங்களில், ஒரு கோயில் சார்ந்த வனப்பகுதியில் தென்மேற்குப் பகுதியில் சூரியக்கதிர்கள் படும் இடத்தில் நடவேண்டும். அந்த மரக்கன்றையும் அவரது பிறந்த நட்சத்திரம் உதயமாகும் நாளில் நடுவது மிக நன்று.



மரக்கன்றை நட்டதும் அவரது கையால் நவதானியங்களை ஊற வைத்த நீரை அச்செடிக்கு விட்டு ஊறிய நவதானியங்களையும் அந்த மரக்கன்றுக்கு உரமாகப்போட வேண்டும். இப்படிச் செய்த மறு விநாடி முதல், அம்மரக்கன்று வளர,வளர அதை நட்டவரின் வாழ்க்கை மலரும்.அந்த மரக்கன்றை நட்டவரின் பிறந்த ஜாதகத்தில் இருக்கும் அனைத்து தோசங்களையும் அந்த மரக்கன்று ஈர்த்துவிடும். அம்மரக்கன்று பூத்து, காய்க்கும்போது, உரியவரின் வாழ்க்கையும் செழிப்பாகத் துவங்கும். அவரது கர்மவினைகள் நீங்கியிருக்கும். கர்மவினைகளை வெற்றிகொள்ள "விருட்ச சாஸ்திரம்" இப்படி ஒரு வழிகாட்டுகிறது.

இப்போது உங்களது பிறந்த நட்சத்திரத்துக்குரிய விருட்சம் எனப்படும் மரம் எதுவெனப் பார்ப்போம்

ஆஸ்வினி - 1 ம் பாதம் - காஞ்சிதை (எட்டி) 2 ம் பாதம் - மகிழம் 3 ம் பாதம் -பாதாம் 4 ம் பாதம் - நண்டாஞ்சு

பரணி - 1 ம் பாதம் - அத்தி 2 ம் பாதம் - மஞ்சக்கடம்பு 3 ம் பாதம் -விளா 4 ம் பாதம் - நந்தியாவட்டை

கார்த்திகை - 1 ம் பாதம் - நெல்லி 2 ம் பாதம் - மணிபுங்கம் 3 ம் பாதம் - வெண் தேக்கு
4 ம் பாதம் - நிரிவேங்கை

ரோஹிணி - 1 ம் பாதம் - நாவல் 2 ம் பாதம் - சிவப்பு மந்தாரை 3 ம் பாதம் - மந்தாரை4 ம் பாதம் - நாகலிங்கம்

மிருக'ரி'ம் - 1 ம் பாதம் - கருங்காலி 2 ம் பாதம் - ஆச்சா 3 ம் பாதம் - வேம்பு
4 ம் பாதம் - நீர்க்கடம்பு

திருவாதிரை - 1 ம் பாதம் - செங்கருங்காலி 2 ம் பாதம் - வெள்ளை 3 ம் பாதம் - வெள்ளெருக்கு 4 ம் பாதம் - வெள்ளெருக்கு

புனர்பூசம் 1 ம் பாதம் - மூங்கில் 2 ம் பாதம் - மலைவேம்பு 3 ம் பாதம் - அடப்பமரம்
4 ம் பாதம் - நெல்லி

பூசம் - 1 ம் பாதம் - அரசு 2 ம் பாதம் - ஆச்சா 3 ம் பாதம் - இருள் 4 ம் பாதம் - நொச்சி

ஆயில்யம் - 1 ம் பாதம் - புன்னை 2 ம் பாதம் - முசுக்கட்டை 3 ம் பாதம் - இலந்தை
4 ம் பாதம் - பலா

மகம் - 1 ம் பாதம் - ஆலமரம் 2 ம் பாதம் - முத்திலா மரம் 3 ம் பாதம் - இலுப்பை 4 ம் பாதம் - பவளமல்லி

பூரம் - 1 ம் பாதம் - பலா 2 ம் பாதம் - வாகை 3 ம் பாதம் - ருத்திராட்சம் 4 ம் பாதம் - பலா

உத்திரம் - 1 ம் பாதம் - ஆலசி 2 ம் பாதம் - வாதநாராயணன் 3 ம் பாதம் - எட்டி 4 ம் பாதம் - புங்கமரம்

ஹஸ்தம் - 1 ம் பாதம் - ஆத்தி 2 ம் பாதம் - தென்னை 3 ம் பாதம் - ஓதியன் 4 ம் பாதம் - புத்திரசீவி

சித்திரை - 1 ம் பாதம் - வில்வம் 2 ம் பாதம் - புரசு 3 ம் பாதம் - கொடுக்காபுளி 4 ம் பாதம் - தங்க அரளி

சுவாதி - 1 ம் பாதம் - மருது 2 ம் பாதம் - புளி 3 ம் பாதம் - மஞ்சள் கொன்றை 4 ம் பாதம் - கொழுக்கட்டை மந்தாரை

விசாகம் 1 ம் பாதம் - விளா 2 ம் பாதம் - சிம்சுபா 3 ம் பாதம் - பூவன் 4 ம் பாதம் - தூங்குமூஞ்சி

அனு'ம் 1 ம் பாதம் - மகிழம் 2 ம் பாதம் - பூமருது 3 ம் பாதம் - கொங்கு 4 ம் பாதம் - தேக்கு

கேட்டை 1 ம் பாதம் - பலா 2 ம் பாதம் - பூவரசு3 ம் பாதம் - அரசு 4 ம் பாதம் - .வேம்பு

மூலம் 1 ம் பாதம் - மராமரம் 2 ம் பாதம் - பெரு 3 ம் பாதம் - செண்பக மரம்
4 ம் பாதம் - ஆச்சா

பூராடம் 1 ம் பாதம் - வஞ்சி 2 ம் பாதம் - கடற்கொஞ்சி 3 ம் பாதம் - சந்தானம் 4 ம் பாதம் - எலுமிச்சை

உத்திராடம் 1 ம் பாதம் - பலா 2 ம் பாதம் - கடுக்காய் 3 ம் பாதம் - சாரப்பருப்பு 4 ம் பாதம் - தாளை

திருவோணம் - 1 ம் பாதம் - வெள்ளெருக்கு 2 ம் பாதம் - கருங்காலி 3 ம் பாதம் - சிறுநாகப்பூ 4 ம் பாதம் - பாக்கு

அவிட்டம் 1 ம் பாதம் - வன்னி 2 ம் பாதம் - கருவேல் 3 ம் பாதம் - சீத்தா 4 ம் பாதம் - ஜாதிக்காய்

சதயம் 1 ம் பாதம் - கடம்பு 2 ம் பாதம் - பரம்பை 3 ம் பாதம் - ராம்சீதா 4 ம் பாதம் - திலகமரம்

பூரட்டாதி 1 ம் பாதம் - தேமா 2 ம் பாதம் - குங்கிலியம் 3 ம் பாதம் - சுந்தரவேம்பு 4 ம் பாதம் - கன்னிமந்தாரை

உத்திரட்டாதி 1 ம் பாதம் - வேம்பு 2 ம் பாதம் - குல்மோகர் 3 ம் பாதம் - சேராங்கொட்டை
4 ம் பாதம் - செம்மரம்

ரேவதி - 1 ம் பாதம் - பனை 2 ம் பாதம் - தங்க அரளி 3 ம் பாதம் - செஞ்சந்தனம் 4 ம் பாதம் - மஞ்சபலா

தங்களுக்குரிய நட்சத்திரங்கள், பாதங்கள் அறிந்து விருட்சங்கள் வளர்த்து, வளம் பெறுங்கள். மரங்களை சாதாரணமாக நினைத்து விடாதீர்கள். ஒவ்வொரு ஆலயத்திற்கும் ஸ்தல விருட்சங்கள் உண்டு. அந்த ஸ்தல விருட்சத்தின் அடியில், அருகில் நீங்கள் அமர்வது, நீங்கள் அந்த ஆலயத்தின் கருவறைக்குள் அமர்வதுக்கு ஒப்பானது. ஆலயத்தை சுற்றி இருக்கும் அருள் அலைகளை ஸ்தல விருட்சம் கிரகித்து வெளியிடுகிறது. உங்கள் ஊரில் அருகில் இருக்கும் ஸ்தலங்களில் விருட்சங்களின் அடியில் அமர்ந்து உணர்ந்து பார்த்துவிட்டு உங்கள் அனுபவங்களை எழுதுங்கள் எந்த ஒரு ஜாதகருக்கும், சில சமயங்களில், கிரக நிலைக்கு ஏற்ப எத்தனையோ பரிகாரங்களை செய்த போதிலும், பலன்கள் உடனடியாக கிடைக்காமல் போனால், நீங்கள் தாராளமாக இந்த விருட்சங்களை பரிந்துரைக்கலாம்.

தொடரும்................

# தமிழர் விடுதலைக்கான பிரதான நுழைவாயில் எங்கே உள்ளது?


-நக்கீரர்-

உலகின் மூலை முடுக்கெல்லாம் பரந்து வாழும் தமிழினம். தனக்கென தனியான நாடின்றியும், தமிழை ஆட்சி மொழியாக்கி அழகுபார்க்கும் திறனின்றியும் தலை குனிந்து நிற்கின்றது. பல ஆயிரம் ஆண்டுகளாய் உலகிற்கு அன்பையும், பண்பையும், அகிம்சையையும், நாகரீகத்தையும் கற்றுத்தந்து சிறப்புற்ற தமிழினமும் அதன் உயிராம் தமிழ் மொழியும் இன்று சிக்கி சின்னாபின்னமாகிறது. இதற்கெல்லாம் காரணங்கள் தான் என்ன?

தமிழையும் தமிழ் இனத்தையும் காப்பாற்றப் போவதாக காலத்திற்குக் காலம் எண்ணுக்கணக்கற்றவர்கள் தோன்றினர். அவர்கள் தத்தமது நோக்கத்தை பல்வேறு முறைகளில் நிறைவேற்ற முனைந்தனர். சிலர் உண்மையாக நடந்து கொண்டனர், பலர் பொய் வேடம் போட்டனர். ஆனாலும் காலம் தன்பாட்டில் கடந்து கொண்டே செல்கிறது. தமிழை காப்பாற்றப் புகுந்தவர்களில் சிலர் நினைக்கப்படுகின்றனர் சிலர் மறக்கப்பட்டனர். சிலர் மறக்கடிக்கப்பட்டனர். எது எப்படியோ தமிழினத்தின் இன அழிப்பு வரலாறுகளில் 21 ம் நுஸற்றாண்டும் தன்னை முள்ளிவாய்க்காலில் பதிவு செய்து கொண்டது. மீண்டும் உலகம் முழுவதும் நீலிக் கண்ணீர் வடித்தது.. முள்ளிவாய்க்கால் சோகத்தின் பின்னும் தமிழரைக் காப்பாற்றப் போவதாக மீண்டும் பலர் குரல் கொடுத்தனர். இன்றும் காப்பாற்றும் படலம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனாலும் தமிழர் தம் விடுதலைக்கான பிரதான நுழைவாயில் எங்கே உள்ளது? அது தொடர்பில் எவராவது தெரிந்தவர் உண்டா? என சாமான்ய தமிழன் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறான்.

**தமிழர் தம் விடுதலைக்கான பிரதான நுழைவாயில் தலைவர்களா?**

தலைவர்கள்தான் தமிழர்களுக்கான விடுதலை நுழைவாயில்கள் என தமிழ் மக்கள் தொட்டு தமிழ் ஊடகங்கள் அனைத்துமே உரைத்து உசுப்பேத்தி உணர்விழக்க வைத்தனர்.



உலகின் மாபெரும் வீரரும், தமிழர்களின் வரலாற்றில் வான்படை கண்ட முதல் தமிழ் அரசாகவும், தம்மை நிலை நிறுத்திய தமிழீழ தேசியத் தலைவர் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களை விடவா தலைவர் ஒருவர் கிடைக்கப் போகிறார். ஆனாலும் அவரது காலத்தின் பின்னும் சிலரும், சில ஊடகங்களும் இன்னும் சிலரை விடுதலைக்கான நுழைவாயில்களாக உள்ள தலைவர்களாக காட்டப் படாதபாடு படுகின்றனர். இவர்களின் ஆரம்பம், மற்றும் நடைமுறைகளை பார்க்கும் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் கீழ் மட்ட தலைவர்களுக்குக் கூட இணையாக முடியாதவர்கள் என்பதே உண்மை. இதனை விடவும் சில கிறிஸதவ மதத் தலைவர்களையும் தமிழர்களின் மீட்பர்களாக காட்டும் நடை முறையும் காலம் காலமாக நடந்து வருகின்றது.

**தமிழர் தம் விடுதலைக்கான பிரதான நுழைவாயில் ஐக்கிய நாடுகள் சபையா?**



உலகின் வல்லரசுகள் வகுக்கும் சட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதே இச்சபையின் பிரதான நோக்கம். உலகில் புதுவிதமான ஆண்டான் அடிமை நாடுகளை ஏற்படுத்தி மீண்டும் காலனித்துவ ஆட்சியை நிலை நாட்டி வரும் இந்த சபை பிணங்களின் மீது ஏறி நின்றே வல்லரசுகளின் நலன்களை பேணி வருகின்றது. இலங்கையின் இறுதி யுத்த காலங்களில் அமெரிக்காவினால் ஐ.நா பாதுகாப்புச் சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை சீனாவும் ரஸ்யாவும் தமது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி தடுத்த போதும் மனித பேரழிவைக் கவனியாது தனது தலைமை நாடுகளின் தீர்மானங்களை மதித்து இன அழிப்புச் செய்ய உறுதுணை போன இந்த அமைப்பா தமிழரின் விடுதலைக்கான நுழைவாயில். பொய் நா கொண்ட ஐ.நா வை தமிழர் தம் தீர்விற்கான நுழைவாயிலாக கூறலாமா?

**தமிழர் தம் விடுதலைக்கான பிரதான நுழைவாயில் ஐரோப்பிய நாடுகளா?**


ஐரோப்பிய நாடுகள் அதன் வரலாற்றுக் காலம் தொட்டு தமது நாடுகளின் நலனிற்காக எவ்வகையான கீழ்த்தரமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.. அதற்கான உதாரணங்கள் வரலாறுகள் தோறும் நீண்டு செல்கினறன. மிகப் பெரிய உண்மை என்னவெனில் தமிழர்களின் இன்றைய நிலைக்கு முழுப் பொறுப்பமே இந்த ஐரோப்பிய நாடுகளையே சாரும். தர்மத்தினால் ஸ்தாபிக்கப்பட்டு, அதே தர்மத்தினால் ஆட்சிசெய்யப்பட்டு வந்த கீழைத் தேசங்களை இந்த காட்டுமிராண்டி கிறிஸ்தவ நாடுகள் அடிமைப்படுத்தி செய்த கொடுமைகள் சொல்லி மாளாது. ஊலகத்தின் பிரதான வர்த்தக நகராக விளங்கிய கொன்ஸ்தாந்திநோபிளை ஒடோமன் துருக்கியர் கைப்பற்றியதும் மேற்குலகின் வர்த்தக நிலை பாதிக்கப்பட்டது. இதுவரை தமது சந்தையில் தாம் வைத்த விலைக்கு பொருட்களை வாங்கி சுரண்டல் வியாபாரம் செய்த நாடுகளான இவை நகரத்தின் உரிமை கைமாறியதும் மிகப்பெரும் பாதிப்புக்குள்ளாகின. இதனால் ஐரோப்பிய நாடுகளின் பல செல்வந்த பிரபுக்களும் அரசர்களும் நாடுகாண் பயணங்களை ஊக்குவித்தனர். அவ்வாறு வருகை தந்த இந்த அதர்மிகள், தர்மமே வடிவாக ஆட்சி புரிந்த கீழைத்தேச மன்னர்களையும், அப்பாவி மக்களையும் ஏமாற்றத் தொடங்கினர். இந்தியா இலங்கை போன்ற நாடுகளை அடிமைப்படுத்தி தமது நாடுகளை வளப்படுத்

படுத்தினர். பத்தாதற்கு தமது நாடுகளில் மதிப்பிழந்து வரும் கிறிஸ்தவத்தை இனி கீழைத்தேச மக்களால்தான் காப்பாற்ற முடியும்



என கருதியும், தமக்கு விசுவாசமான அடிமைகளை மதத்தின் ஊடாகவே தக்கவைத்து கொள்ள முடியும் எனவும் கருதி மத மாற்றத்தை முடுக்கி விட்டனர். இன்று வரை இலங்கையில் அதிகம் மத மாற்றத்திற்கு உள்ளானது தமிழர்களே.

இன்னும் தாம் போனபின்பும் இலங்கை வளர்ந்து விடக்கூடாது என்பதற்காக இன ரீதியாக இலங்கையரை பிரித்து நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்றனர். அந் நிலையினை தொடர்ந்தும் தக்க வைக்க தமது மதம் மாறிய கிறிஸதவ தலைவர்களைப் பயன்படுத்திக் கொண்டனர். தமிழர்கள் தந்தை என அழைக்குமளவிற்கு இருந்த அவர்கள் இலங்கை அரசியலில் பிரிவினையை ஊக்குவித்தனர். இதனில் அதிகம் பாதிக்கப்பட்டது தமிழர்களே. இன்றும் தமிழர்களையும் சிங்களவர்களையும் சிண்டு முடிந்துவிடும் வேலையை இவர்ளைப் பின்பற்றும் மதகுருமார் கச்சிதமாக மேற்கொண்டு வருகின்றனர். இந்த ஐரோப்பிய நாடுகள் தமது நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்த இவர்களே துணை.



இந்தியா-பாகிஸ்தான் எல்லை

இது உங்களுக்கு புரியாது போனால் இந்தியாவை எப்படி இவர்கள் இன்று வரை அழித்து வருகிறார்கள் என்பதைப் பார்த்தால் புரியும். இந்தியாவிற்கு சுதந்திரம் கொடுக்கும் போது பாகிஸ்தான் எனும் நாட்டை பிரித்துக் கொடுத்து விட்டுத்தான அதனை வழங்கினார்கள். வெவ்வேறு இராச்சியங்களாக கைப்பற்றிய இலங்கையை ஒன்றாக்கி வழங்கிய இவர்கள் ஏன் ஒரே நாடாக இருந்த இந்தியாவைப் பிரித்து வழங்க வேண்டும். இது சிந்தனைக்குரிய விடயமல்லவா? இன்று வரை பாகிஸ்தானின் பயங்கர வாத நடவடிக்கைகளுக்கு இவர்களே துணை புரிகின்றனர் என்பது அண்மைக்காலமாக நிரூபிக்கப்பட்டு வருகின்றது.

ஆக இந்த ஐரோப்பிய நாடுகள் இலங்கைத் தமிழர்களின் விடுதலைக்கு நுழைவாயிலாக இருக்க முடியுமா?

**<u>தமிழர்தம் விடுதலைக்கான பிரதான நுழைவாயில் தமிழ் நாடா?,</u>**



தமிழ்நாடு

பல கோடி தமிழரைக் கொண்ட தமிழ் நாடு ஏன் இன்று வரை தனிநாட்டுக்கான காத்திரமான போராட்டத்தை முன்னெடுக்கவில்லை. அப்படியொரு சம்பவம் நடந்திருப்பின் தமிழ் நாடும் ஈழம் போல் மாறியிருக்குமோ என்னவோ?

ஆனால் இந்தியாவிலும் சரி உலக அரங்கிலும் சரி தமிழ் நாடு தனக்கென ஒரு தனியிடத்தை பெற்று தலை நிமிர்ந்து நிற்கிறது. உலகின் திரைப்படத் தயாரிப்புத் துறையில் மூன்றாம் இடம்பிடித்த கோடம்பாக்கம் தொட்டு பல்வேறு முன்னணி தயாரிப்பு நிறுவனங்களும், வர்த்தகங்களும், கல்வியும் என தமிழ் நாடு முன்னேறிச் செல்கிறது. இந்திய அரசியலை தீர்மானிக்கும் மிகப் பெரிய சக்தியாக தமிழகம் வளர்ந்து நிற்கிறது. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களும் ஏங்கி பெரு மூச்சுவிடும் வண்ணம் தனது சாதனைகளை நிகழ்த்திய வண்ணம் முன் மாதிரியாக திகழ்கிறது. இந்தியாவில் இந்துக்களை அதிகமாக கொண்ட ஒரு மாநிலமாக இருந்தாலும் அதிகளவு தலைவர்கள் நாஸ்திகர்களாகவே உள்ளனர். இந்துக்களை திருடன் என்று சொன்ன கலைஞர் கருணாநி தொட்டு சிவலிங்கத்திற்கு புது அர்த்தம் சொன்ன செபஸ்டியன் சைமன், தாலியறுப்பு புகழ் கி.வீரமணி என பலரும் நாஸதிகரகளே. இருப்பினும் இவர்களையும் போற்றும் தமிழ் நாட்டு தமிழர்களின் கருத்துச் சுதந்திரம் மற்றும் சகிப்புத் தன்மை என்பவறை்றை உலகமே கற்றுக் கொள்ள வேண்டும். ஆக தமிழ் நாடு இந்தியாவின் மாநிலமாக இருந்து கொண்டு தனது தனித்தன்மையை பேணியபடி நெடுந் தூரம் பயணித்து வந்திருக்கிறது. ஆனால் தமிழ்நாடு மற்றும் அங்குள்ள தமிழர்களால் ஒரு போதும் இலங்கைத் தமிழர்களின் விடிவினை விரைவு படுத்தவோ, அல்லது பெற்றுத் தரவோ முடியாது என்பது அறுதியான முடிவு.




உண்ணாவரதமும், பாதிரியார் முடித்து வைக்கும் காட்சியும்.

தமிழ் நாட்டை ஆண்ட, ஆண்டு வரும் திராவிடர் கழகங்கள் எப்போதும் நேர்மையான ஆட்சியினை செய்ததில்லை. 2009 காலப்பகுதியில் தமிழர்கள் இனவழிப்புச் செய்யப்படும் போது போலியாக உண்ணாவிரதம் இருந்து போர் நிறுத்தப்பட்டு விட்டதாக அறிக்கை விட்டு நாட்டையே குழப்பத்தில் ஆழ்த்தி கொடுங்கோல் ஆட்சிகளை காப்பாற்றிய கருணாநிதியாகட்டும்,



ஜெயலலிதா



வைகோ

தன்னையே மையமிடும் வகையில் எதிர்கால பிரதமர் கனவில் மிதக்கும் ஜெயலலிதாவாகட்டும் நேர்மை மற்றும் பொது நோக்கு என்பது அறவே அற்றவர்கள். இவர்களை விட போலி தமிழ்ததேசிய வாதி சீமான், பல வருடங்களாக தமிழ் நாட்டுப் பிரச்சினைகள் எதனையும் கதைக்காது வெறும் தமிழீழக் கோசம் போட்டு பிழைக்கும் வைக்கோ, இந்தியாவின் சைக்கோவாக மாறிவரும் விஜயகாந்த் போன்றவர்களால் ஒரு செங்கல்லைக் கூட அசைக்க முடியாது.




ஜெயலலிதாவின் இலவசங்கள்

தமிழ் நாட்டு மக்களும் வெறும் உணர்ச்சிக் கோசங்களுக்கும், இலவசங்களுக்கும் ஆசைப்பட்டு இவ்வாறான மோசமான தலைவர் களையே தொடர்ந்தும் ஆட்சிப் பீடம் ஏற்று கிறார்கள்.




ஜெயலலிதாவிற்கு கோயில்.


ஆக தேசப்பற்றும் நேர்மையும், திறனும் கொண்ட கட்சிகள் தமிழ் நாட்டை ஆளுவது கேள்விக் குறியாகும் நிலையில் தமிழ் நாடு தமிழர்களின் விடுதலைக்கன நுழைவாயிலாக இருக்க முடியுமா?

விடுதலைக்கான பயணம் தொடரும்........................

**பிற மதப் பெண்களை முஸலீம்கள் அடிமைப்படுத்தி உறவு கொள்ளலாம்.**

அல்-அசார் பல்கலைக் கழகத்தில் பேராசிரியையாகக் கடமையாற்றுகின்றார் சவாத்சாலே. அவர் தொலைக்காட்சி ஒன்றிற்கு அளித்த பேட்டியொன்றில் முஸ்லீமல்லாத பிற மத பெண்களை அடிமைகளாக்கி உறவு வைத்துக் கொள்ள முஸ்லீம்களுக்கு அல்லாஹ் அனுமதியளித்துள்ளான் என கருத்துத் தெரிவித்துள்ளார். முஸ்லீம்களுக்கும் பிற நாட்டுக்கம் போர் நடக்கும் சமயத்தில் பெண்களை அடிமைகளாக்கிக் கொள்ளலாம். அவர்களுடன் உறவு கொள்வதும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது எனத் தெரிவித்துள்ளார்.

**பூஜ்ய ஸ்வாமி தயானந்த சரஸ்வதி முக்தியடைந்தார்.**



ஆர்ஸவித்யா பீடத்தின் ஸ்தாபகரும் வேதாந்த ஆச்சாரியருமான பூஜ்ய ஸ்வாமி தயானந்த சரஸ்வதி அவர்கள் கடந்த வருடம் (2015) தன்னுடைய 85வது வயதில் முக்தி அடைந்தார். இந்து ஆன்மீகக் கலாசாரப் பெருமையை உலகெங்கும் பரப்பி பல்வேறு நாடுகளிலிருந்து மக்களை இந்து தர்மத்தின்பால் ஈர்த்தவரான பூஜ்ய ஸ்வாமி தயானந்த சரஸ்வதி அவர்களின் சாதனையானது ஒவ்வொரு இந்துவும் பெருமையுடனும் நன்றியுடனும் போற்ற வேண்டியதாகும். போலி மதச்சார்பின்மை கொடிகட்டிப் பறக்கும் காலக்கட்டத்தில் ஒவ்வொரு இந்துவும் தான் இந்துவாகப் பிறந்ததைப் பெருமையாக நினைக்குமாறு இந்து தர்மத்தை மக்களிடையே கொண்டு சென்ற பூஜ்ய ஸ்வாமிஜியின் இழப்பு இந்து தர்மத்துக்கும், இந்து சமூகத்துக்கும் பேரிழப்பாகும். இறைவனடி எய்திய பூஜ்ய ஸ்வாமிஜிக்கு நமஸ்கரித்து அஞ்சலி செலுத்துகின்ற இந்நேரத்தில், அவருடைய சாதனைகளையும் சேவைகளையும் நினைவு கூர்ந்து, அவர் காட்டிய வழியில் பயணித்து இந்து தர்மத்தை நிலைநாட்டுவோம் என்று பிரதிக்ஞை செய்துகொள்வது நம் அனைவருடைய கடமையாகும்.

**திருக்குறள் கொரிய மொழிபெயர்ப்பு**

திருக்குறளை கொரிய மொழியிலும் மொழிபெயர்க்க வேண்டும் என்ற கொரிய மக்கள், தமிழறிஞர்களின் கனவை நனவாக்கும் வகையில் விதி எண் 110-இன் கீழ் தமிழக அரசு உத்தரவு ஒன்றை பிறப்பித்தது. அதன்படி, திருக்குறளை கொரிய மொழியில் மொழிபெயர்க்கும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது. தமிழில் உள்ள மெய்யெழுத்துக்களைப் போன்றே, கொரிய மொழியிலும் பல மெய்யெழுத்துக்கள் உள்ளன. கொரிய மொழியோடு மட்டுமின்றி, தெற்காசிய மொழிகளுடனும் தமிழக்கு உறவு உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ.எஸ் தீவிரவாதிகளை அழித்து விடுங்கள்

அண்மையில் ஈராக்கில் உள்ள கிராமத்தில் வசித்த பல பெண்களை ஐ.எஸ் தீவிரவாதிகள் தங்களின் தலைமையிடமான மோசூல் நகருக்கு கடத்திச் சென்றனர். ஆவர்களின் பிடியில் சிக்கி பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளான யாசிதி இனப் பெண்ணான நாதியா முராத் பாசீ தாகா தப்பி வந்து ஐ.எஸ் தீவிரவாதிகளை அழித்து விடுங்கள் என ஐ.நா விற்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

**இந்தியாவை அழித்து இந்துக்களை கொல்ல**

அல்லாஹ் பாகிஸ்தானியர்களை பணித்துள்ளார்.

இந்தியாவை அழித்து இந்துக்களை கொல்ல அல்லாஹ் பாகிஸ்தானியர்களுக்கு உரிமை அளித்துள்ளார் என பிரபல இஸ்லாமிய தலைவரும், முன்னாள் வங்கி ஊழியருமான இர்பான் உல் ஹக் தெரிவித்துள்ளார். சிலை வழிபாடு சிலை வழிபாட்டு வழக்கம் அரபு நாடுகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. அல்லாஹ் நபிகள் நாயகத்திற்கு குறிப்பிட்ட காலம் மட்டுமே அளித்ததால் அவர் இறந்துவிட்டார். நபிகள் நாயகத்தின் பணி அவரது ஆயுட்காலத்தில் முடிந்துவிடவில்லை. அரபு நாடுகளுக்கு வெளியே சிலை வழிபாட்டை ஒழிக்கும் வேலையை செய்ய வேண்டி உள்ளது. இந்தியாவுக்கு எதிரான போரில் கலந்து கொள்ளும் முஸ்லீம்களுக்கு சகாபாக்களின் நிலை கிடைக்கும். இந்தியாவுக்கு எதிரான இந்த ஜிஹாத்தில் கலந்து கொள்பவர்கள் இந்துக்களை கொன்று, பிறரை சிறை பிடிப்பார்கள். அவர்களுக்கு இந்தியாவில் வெற்றி கிடைக்கும். நபிகள் நாயகம் இந்த வார்த்தைகளை கூறிய நாளில் தான் பாகிஸ்தான் உருவாக்கப்பட்டது என அவர் கூறியுள்ளார்.

ராமர் கோயில் கட்டப்படும்:

ஆர்.எஸ்.எஸ். முஸ்லிம் பிரிவு

அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்புடன் அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்படும் என ஆர்.எஸ்.எஸ். முஸ்லிம் பிரிவான முஸ்லிம் ராஸ்டீரிய மஞ்ச் அறிவித்துள்ளது.

ருாமர் இந்தியர்களின் சின்னமாக விளங்குகிறார் என அந்த அமைப்பை ஏற்படுத்திய ஆர்.எஸ்.எஸ். தலைவர் இந்த்ரே‘ குமார் கூறினார். இந்த உண்மை குறித்து முஸ்லிம்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். ராமர் இந்துக்களின் கடவுளாக விளங்கும் அதே நேரத்தில், பாபரை முஸ்லிம்கள் வணங்கவில்லை என்றார் குமார்.

போப் பிரான்சிஸ் - ரஸ்ய திருச்சபைத் தலைவர் சந்திப்பு

கிறிஸ்தவ சரித்திரத்தில் கடந்த ஆயிரம் ஆண்டுகளில் இல்லாத வகையில், கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவரான போப் பிரான்சிஸும், ரஸ்ய மரபுவாத திருச்சபையின் தலைவரான பாட்ரியார்க் கிரில்லும் கியூபாவில் சந்தித்து பேசியுள்ளனர். இந்தச் சந்திப்பின்போது உலகெங்கும் உ்ள கிறிஸ்தவ மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிகள் குறித்து பேசப்பட்டதாகக் கூறப்படுகிறது. இவர்களிடையேயான சந்திப்பு, சித்தாந்த ரீதியில் பிளவுபட்டுள்ள கிறிஸ்த்தவத் திருச்சபைகளை ஒருங்கிணைக்கும் முயற்சியில் ஒரு திருப்புமுனையாக இருக்கும் என்று கருத்துக்கள் வெளியாகியுள்ளன.

# வரங்கள் அருளும் ஸப்த கன்னிகள் வரலாறும், வழிபாடும்.

தாய் தெய்வ வழிபாடே மிகப் பழமையான வழிபாடாகும். இதுவே பின்னாளில் கொற்றவை வழிபாடாக நிலை பெற்றது. சங்க இலக்கியங்களிலும், ஐம்பெரும் காப்பியங்களிலும் காடுகிழாள் என்று இவ்வழிபாடு பேசப்படுகிறது. சிவபெருமான் அட்ட (எட்டு) வீரச்செயல்கள் புரிந்து தீய சக்திகளை வதம் செய்தார் என்பது சிவ புராணமாகும். அதே போன்று தேவியும், அசுர சக்திகளை அழிக்க எடுத்த ஏழு உன்னத வடிவங்களை தேவி மகாத்மியம் புகழ்ந்து பாடுகிறது.


மேலும் சிவபெருமான் அந்தாகாசுரன் உள்ளிட்ட அசுரக் கூட்டத்தை அழித்திட பிரம்ம தேவன் முதலான ஆண் தெய்வங்களின் சக்திகள் (மனைவியர்) சப்தமாதர்கள் என்றும் பெண் தெய்வங்களாகி உதவினர். இத்தேவதைகளே சப்தமாதர்கள், சப்த கன்னியர், சப்த மங்கையர் என வழிபடப்படுகின்றனர்.

மிகப்பழமையான சிவாலயங்களில் கர்ப்பகிரகத்தை ஒட்டிய முதல் பிரகாரத்தில் தென்புறமுள்ள தென்முகக் கடவுளான தெட்சிணா மூர்த்தி சன்னதிக்கு முன்பாக சப்த மங்கையர் இருக்கக் காணலாம். வலது காலை தொங்கவிட்டு இடது காலை மடக்கி அமர்ந்த கோலத்தில் ஏழு தேவியரும் காட்சி தருவார்கள். சில இடங்களில் தனித்தனி சிற்பமாகவும், சில கோவில்களில் நீண்ட செவ்வகக்கல்லில் அடுத்தடுத்தும் இத்தேவியர் சிற்பங்கள் காணப்படுகின்றன.




சப்தமாதாக்கள் அல்லது சப்தகன்னியர் வழிபாடு என்பது அம்பிகை வழிபாட்டின் அங்கமாகக் காணப்படுகின்ற கிராமிய தெய்வ வழிபாடு ஆகும். சக்தி அம்சத்தில் சப்த மாதர்கள் வழிபாடு சிறப்பிடம் பெறுகிறது அண்ட முண்டர்கள் என்ற அரக்கர்களை அழிக்க வேண்டி மனித கர்ப்பத்தில் பிறக்காமலும், ஆண் பெண் இணைவில் பிறக்காமலும், அம்பிகை எனப்படும் சக்தியின் அம்சத்திலிருந்து உருவானவர்களே இந்த சப்த கன்னிகைகள். அவர்கள் பிராம்மி, மகேஸ்வரி, கவுமாரி, வை்ணவி, வராஹி, இந்திராணி, சாமுண்டி முதலான ஏழு கன்னிகைகள் சப்த மாதர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

**1. பிராம்மி (பிராம்மணி)**



சப்தமாதர்கள் கூட்டத்தில் முதலாவதாக உள்ள தேவி பிராம்மி எனப்படுகிறாள். படைப்புக் கடவுளான பிரம்மாவின் அம்ச மாணவள். எனவே பிரம்மனை போன்று நான்கு முகங்கள், நான்கு கைகள், எட்டு கண்கள் உடையவள். நான்கு கரங்களில் ஒன்று அபயஹஸ்தமாகவும், மற்றொன்று வரத ஹஸ்தமாகவும் உள்ளன. ஞானம் தந்து அஞ்ஞானம் நீக்குபவள்.

**மகேஸ்வரி**



அம்பிகையின் தோளில் இருந்து உருவானவள் மகேஸ்வரி. ஈஸ்வரன் இவளது சக்தியால்தான் சம்ஹாரமே செய்கிறார். மகேசனின் சக்தி இவள். முக்கண் படைத்தவள். ஜடா மகுடத்துடன் காட்சியளிப்பாள். மான், மழு ஏந்தி, அபயவரதம் காட்டி நான்கு கரங்களுடன் இருப்பாள். தூய வெண்ணிறமே பிடித்த வண்ணம். வடகிழக்கு என்னும் ஈசானியம் திசையை நிர்வகித்து வருபவள். இவளை வழிபட்டால்,நமது கோபத்தைப் போக்கி சாந்தத்தை அளிப்பாள்.

**கருமாரி**



கவுமாரன் என்றால் குமரன். குமரன் என்றால் முருகக்கடவுள். ஈசனும், உமையாலும் அழிக்க இயலாதவர்களை அழித்தவர் தான் குமரக்கடவுள் எனப்படும் முருகக்கடவுள். முருகனின் அம்சமே கவுமாரி. இவளுக்கு சீடி, தேவசேனா என்ற வேறு பெயர்களும் உண்டு. மயில் வாகனத்தில் வருபவள். அட்ட திக்கிற்கும் அதிபதி இவளை வழிபட்டால், குழந்தைச் செல்வம் உண்டாகும்.


**4.வைஸ்ணவி**



அம்பிகையின் கைகளில் இருந்து பிறந்தவள் வைஸ்ணவி. இவள் விஸ்ணுவின் அம்சம். கருடனை வாகனமாக கொண்டவள். வளமான வாழ்வு தருபவர்.சகல சவுபாக்கியங்கள், செல்வ வளம் அனைத்தையும் தருபவளே வைஸ்ணவி. குறிப்பாக தங்கம் அளவின்றி கிடைத்திட வைஸ்ணவி வழிபாடு மிக அவசியமாகும். விஸ்ணுவின் சக்தியான இவர் நீல நிறமானவர். ஆறு கரங்களைக் கொண்டிருப்பார்.

விஸ்ணுவிற்குரிய ஆபரணங்களை அணிந்து கருடனை வாகனமாகவும் கொடியாகவும் கொண்டிருப்பார். காக்கும் கடவுளான மகாவிஸ்ணுவின் பெண் அம்சமாக வைஸ்ணவிதேவி போற்றப்படுகிறாள். விஸ்ணுவைப் போன்ற அருள்பொழியும் தாமரைக் கண்கள் கொண்டவள். விடக்கடிகள் குணமாகவும், தோல் தொடர்பான பிணிகள் நீங்கவும் வைஸ்ணவியை வழிபடுகிறாள்.

**5. வராகி அம்மன்**



பன்றி முகத்தோடு காட்சியளிப்பவள். இவள் அம்பிகையின் முக்கிய மந்திரியாக விளங்குகிறாள். வராஹும் எனப்படும் பன்றியின் அம்சமானது விஸ்ணுவின் அவதாரங்களில் ஒன்றாகும். இவளுக்கும் மூன்று கண் உண்டு. இது சிவனின் அம்சமாகும். அம்பிகையின் அம்சமாக பிறந்ததால், இவள் சிவன்,ஹரி,சக்தி என்ற மூன்று அம்சங்களைக் கொண்டவளாவாள். எதையும் அடக்க வல்லவள். சப்த கன்னிகைகளில் பெரிதும் வேறுபட்டவள். மிருகபலமும்,தேவகுணமும் கொண்ட இவள் பக்தர்களின் துன்பங்களை தாங்கிக் காப்பவள். பிரளயத்தில் இருந்து உலகை மீட்டவளாகச் சொல்லப்படுகின்றாள். எருமையை வாகனமாக உடையவள். கலப்பை, உலக்கை ஆகியவற்றைப் பின்னிரு கரங்களில் தாங்கி அபயவரதம் காட்டுவாள். லலிதாம்பிகையின் படைத்தலைவி இவளே. தண்டினி என்ற பெயருடன் சிம்ஹவாஹினியாய்க் காட்சி கொடுப்பாள். இவளை வணங்குவோர் வாழ்வில் சிக்கல்கள், தடைகள், தீராத பகைகள் தீரும்.

**6.இந்திராணி**



இந்திரனின் அம்சம். கற்பக மலர்களை கூந்தலில் சூடியவள். யானை இவளது வாகனம். சொத்து சுகம் தபவர். தன்னை வழிபடுபவர்களின் உயிரைப் பேணுவதும், அவர்களுக்கு நல்ல வாழ்க்கைத்துணையை அமைத்துத் தருவதிலும், மிகவும் தலைசிறந்த அதேசமயம் முறையான காமசுகத்தைத் தருவதும் இவளே!. மணமாகாத ஆண்கள் இவளை வழிபட்டால், அவர்கள் மிகச்சிறந்த மனைவியையும், கன்னிப்பெண்கள் இவளை வழிபட்டால், மிகப் பொருத்தமான கணவனையும் அடைவார்கள். இந்திரனின் சக்தியான இவள் ரத்ன மகுடம் தரித்தவள். பொன்னிற மேனி உடையவள். நாற்கரத் தினள். சக்தி ஆயுதமும், வஜ்ராயுதமும் தாங்கி அபயகரம் காட்டுவாள்.சத்ரு பயம் போக்குபவள்.

**7.சாமுண்டிதேவி**



ஈஸ்வரனின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய பத்திரகாளியானவள், தனது கோரமான முகத்தை மாற்றி சாமுண்டியாக ஆனவள். இவள் தனது ஆறு சகோதரிகளுடன் சேர்ந்து தாருகன் என்ற அரக்கனை அழித்தாள். பதினாறு கைகள், பதினாறு விதமான ஆயுதங்கள், மூன்று கண்கள், செந்நிறம், யானைத் தோலால் ஆன ஆடையை அணிந்திருப்பவள். சப்தகன்னிகைகளில் முதலில் தோன்றியவள் இவளே! சப்த கன்னிகைகளில் சர்வ சக்திகளையும் கொண்டிருப்பவள்." மனிதர்களுக்கு மட்டுமல்ல் தேவர்களுக்கே வரங்களை அருளுபவள் இவளே! இவளை வழிபட்டால், எதிரிகளிடமிருந்து நம்மைக் காப்பதோடு,நமக்குத் தேவையான சகல பலங்கள், சொத்துக்கள், சுகங்களைத் தருவாள். இனி வேறுவழியில்லை என்ற சூழ்நிலை ஏற்படும்போது, இவளை அழைத்தால், புதுப்புது யுக்திகளைக் காட்டுவதோடு, முடியாததையும் முடித்துவைப்பாள். கறுப்பு நிறமானவர். பயங்கரமான தோற்றம் கொண்டவர். பயப்பேயையே பயந்தோடச் செய்யும் தோற்றம் கொண்டவள் சாமுண்டி.

# சொல்கிறோம் கேளுங்கள்!

1.விபூதி என்பதன் பொருள் என்ன?
மேலான செல்வம்
2.துளசியை விஸ்ணுவின் மனைவி எனும் நூல்?
தேவி பாகவதம்
3.நெற்றியில் இடும் திருமண் எது?
விஸ்ணுவின் திருவடி
4.பாவத்தையே கண்டிப்பதால் உருத்ராட்சத்தின் பெயர் யாது?
கண்டிகை
5.வில்வத்தில் திருமகள் இருப்பதால் அதன் பெயர் யாது?
ஸ்ரீவிருட்சம்
6.வேதத்தின் சாரமாக கருதப்படும் மந்திரம் எது?
காயத்ரி மந்திரம்
7."மந்திரமாவது நீறு" என பாடியவர் யார்?
திருஞானசம்பந்தர்
8. நம்மாழ்வாரைப் போற்றிய ஆழ்வார் யார்?
மதுரகவியாழ்வார்
9.விவேகானந்தருக்கு பிடித்தமான உபநிடதம் எது?
கடோபநிடதம்
10. சேக்கிழாருக்குப் பெற்றோர் இட்ட பெயர் யாது?
அருண்மொழி
11.ரமணர் என்பதன் பொருள் யாது?
மனதிற்கு இனியவர்
12.பிரம்மாவின் வாகனம் எது? அன்னம்
13.விரத அனுஷ்டிப்பின் போது உபவாசம் இருந்த பின் உண்ணும் உணவின் பெயர் யாது?
பாரணை
14.சுத்த அறிவே சிவம் என்று பாடியவர் யார்?
தாயுமானவர்
15.சேக்கிழாரால் சிவபக்தராக மாறிய மன்னர் யார்?
அநபாயச் சோழன்
16.திருநாவுக்கரசர் பெயரில் தாக சாந்தி செய்தவர் யார்? ஆப்பூதியடிகள்
17. பக்த வத்சலன் என்பதன் பொருள் யாது?
தாயன்பு கொண்டவன்
18. "ஆணை நமதே" என்று பாடும் சிவனடியார் யார்?
திருஞானசம்பந்தர்
19.காரைக்காலம்மையாருக்கு பெற்றோரிட்ட பெயர் யாது? புனிதவதி
20. திருநாவுக்கரசரின் சகோதரி பெயர் யார்?
திலகவதியார்
21.சரஸ்வதியின் கையிலுள்ள வீணையின் பெயர் யாது? விபஞ்சி
23. காளிதாசர் எழுதிய முருகனின் வரலாறு கூறும் நூல் எது? குமார சம்பவம்
24.சிவனைக் கல்லால் அடித்து வழிபட்ட நாயனார் யார்? சாக்கிய நாயனார்



# கேளுங்கள் சொல்கிறோம்.

**பல்லி சொல்லுக்கு பலன் கூறுவது உண்மை தானா?**
**கா.சர்வானந்தன்.சாவகச்சேரி**

"கௌலீ ஆருடம்" என்று இதற்குப் பெயர். இன்னவின்ன மாதிரி பல்லி சப்தமிட்டால் அவற்றிற்கு இன்னின்ன பலன் என்று சாஸ்திரம் கூறுகிறது. பஞ்சாங்கத்தில் இதற்கான விளக்கம் இருக்கும்.

**கோவிலில் பலிபீடம் அமைத்துள்ளது ஏன்?**
**சி.காண்டீபன். கரவெட்டி.**

பொதுவாக பலியிடுதல் என்பதற்கு "அழித்தல்" அல்லது "போக்குதல்" என்று பொருள். கோவிலுக்குள் நுழைந்ததும், பலிபீடத்தின் முன் நமஸ்காரம் செய்வதன் மூலம் செய்த பாவத்தைப் போக்கி நம்மை புனிதமாக்கிக் கொள்கிறோம். அதன்பிறகே, மூலஸ்தானம் சென்று கடவுளை வணங்க வேண்டும். வழிபாடு முடிந்து வெளியேறும் போதும் அங்கே வழிபட்டு பாவத்தில் ஈடுபடாமல் வாழ்வதற்காக வேண்டிக் கொள்ள வேண்டும்.

**பூர்வ ஜென்ம புண்ணியம் என்பதன் பொருள் என்ன?**
**மு.பத்மராஜா, செம்மலை**

நமக்கு பல பிறவிகள் உண்டு. ஒவ்வொரு பிறவியிலும் பாவ, புண்ணியங்களைக் கலந்தே செய்கிறோம். இவையே அடுத்த பிறவியில் நம் வாழ்வின் நடைமுறைக்கு காரணமாக அமைகிறது. நன்றாக வாழ்ந்தால் பூர்வ ஜென்ம புண்ணியம் என்றும், கஸ்டப்பட்டால் பூர்வ ஜன்ம பாவம் என்றும் சொல்கிறோம். "பூர்வ" என்பது முற்பிறவியைக் குறிக்கும்.

**ருத்ராட்ச மாலை அணிவோருக்கு தகுதி ஏதும் தேவையா?**
**தி.அருள் பிரகாஸ், உடுவில்.**


இறை நம்பிக்கை கொண்டவர்கள், திருநீறு, ருத்ராட்சம் அணிவதை புனிதமாகக் கருதுபவர்கள் அனைவரும் தகுதி உள்ளவர்களே. மது, மாமிசம் உண்பது கூடாது. துக்க நிகழ்ச்சிகளுக்குச் செல்லும் போதும், தீட்டு காலத்திலும் ருத்ராட்சம் அணியக் கூடாது. தொடர்ந்து ருத்ராட்சம் அணிந்தால், இதய நோய் தடுக்கப்படும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

**விஸ்ணுவிற்கு அவதாரம் இருப்பது போல, சிவனுக்கும் உண்டா?**
**க.மணிவண்ணன், திருமலை.**

ஞான சம்பந்தர் சிவனை "பிறப்பிலி" என்று போற்றுகிறார். அதாவது "கர்ப்பவாசம் செய்து பிறப்பு எடுக்காதவர்" என்பது பொருள். சரபர், பைரவர், தட்சிணாமூர்த்தி போன்ற வடிவங்களில் தாமே அருள்பாலித்தாரே தவிர, அவதாரம் அல்லது கர்ப்ப வாசப்பிறப்பு எடுக்கவில்லை. சைவத்தில் அவதாரம் என்ற சொல்லைக் கையாள்வதில்லை.

**கொடிமரத்தின் முன் மட்டும் விழுந்து வணங்க வேண்டும் என்கிறார்கள். அந்தந்த சன்னிதி முன் விழுந்து வணங்குவது தவறா?**
**ஆர்.இந்துவதனி, மன்னார்**

கோவிலுக்குள் எல்லா இடங்களிலும் தெய்வ சன்னிதிகள் அமைந்திருக்கும். ஒவ்வொரு சன்னிதியாக விழுந்து வணங்கினால் பின்புறம் உள்ள சுவாமிக்கு நேரே நம் காலை நீட்ட நேரிடும்.மேலும் பிரதான தெய்வத்தை வணங்கினாலே எல்லா தெய்வங்களையும் வணங்கிய பலன் கிடைத்துவிடும். இப்படி பொதுவான பல காரணங்கள் பற்றியே கொடிமரத்தடியில் நமஸ்காரம் செய்யவேண்டும் என்கிறார்கள்.



## நல்லதைப் பேசுங்கள்!

விஸ்வாமித்திரரின் ஆஸ்ரமத்திற்கு வசிஸ்டர் வந்திருந்தார். இருவரும் பல விடயங்களைப் பேசினர். வசிஸ்டர் விடை பெறும் போது, விஸ்வாமித்திரர் அவருக்கு மறக்க முடியாத அன்பளிப்பு ஒன்றை வழங்க விரும்பி, ஆயிரம் ஆண்டு தவத்தால் தனக்கு கிடைத்த சக்தியை கொடுத்தார். மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்ட வசிஸ்டரும் நன்றி சொல்லி புறப்பட்டார்.

இன்னொரு சமயத்தில் வசிஸ்டரின் ஆஸ்ரமத்திற்கு விஸ்வாமித்திரர் வர நேர்ந்தது. வசிஸ்டரும் அவரை அன்புடன் உபசரித்தார். புண்ணியம் தரும் ஆன்மிக விடயங்களை மட்டுமே பேசினார். விடை பெறும் நேரத்தில், வசிஸ்டரும் விஸ்வாமித்திரருக்கு அன்பளிப்பு வழங்க விரும்பினார். "இவ்வளவு நேரம் நல்ல விடயங்களை பேசியதற்கு கிடைத்த புண்ணிய பலனை உமக்கு அளிக்கிறேன்"" என்றார். இதைக் கேட்ட விஸ்வாமித்திரரின் முகம் சுருங்கியது. நீங்கள் எனக்களித்த ஆயிரம் ஆண்டு தவப்பயனும், இந்த அரை நாள் நல்ல விடயங்கள் பற்றி பேசிய புண்ணியமும் எப்படி சமமாகும் என்று தானே யோசிக்கிறீர்கள்?"" என்று கேட்டார். விஸ்வாமித்திரரும் தலையாட்டினார். எது உயர்ந்தது என்பதை நாம் பிரம்மாவிடமே கேட்டு தெரிந்து கொள்வோம் என்று முடிவு செய்து பிரம்மலோகம் சென்றனர். பிரம்மாவிடம் நடந்ததை விளக்கினர். "இது விடயத்தில் தீர்ப்பு சொல்ல என்னால் முடியவில்லை. விஸ்ணுவிடம் முறையிடுங்கள்"" என்றார் பிரம்மா. அவர்களும் விஸ்ணுவிடம் சென்று கேட்டனர். "தவ வாழ்வில் என்னை விட சிவனுக்குத் தான் நிறைய அனுபவம் உண்டு. அவரிடம் விசாரித்தால் உண்மை விளங்கும்"" என்றார் விஸ்ணு. கைலாயம் சென்று சிவனிடம் விளக்கம் தரவேண்டினர். சிவனும், "உங்களுக்கு தெளிவு வேண்டுமானால் பாதாள லோகத்திலுள்ள ஆதிசேசனின் உதவியை நாடுங்கள்"" என்றார். விஸ்வாமித்திரரும், வசிஸ்டரும் பாதாளலோகம் வந்தனர். தங்கள் சந்தேகத்தை எடுத்துக் கூறினர் "இதற்கு யோசித்தே பதில் சொல்ல வேண்டும். அதுவரை இந்த பூலோகத்தை தாங்கும் பணியை நீங்கள் செய்யுங்கள். தலையில் சுமக்க கடினமாக இருக்கும். எனவே, ஆகாயத்தில் இதை நிலை நிறுத்தி வையுங்கள்" என்றார். உடனே விஸ்வாமித்திரர் "நான் இப்போதே ஆயிரம் ஆண்டுகள் செய்த தவத்தின் சக்தியை கொடுக்கிறேன். அதன் பயனாக பூமி ஆகாயத்தில் நிலைபெற்று நிற்கட்டும்"" என்றார். ஆனால், பூமியில் எந்த மாற்றமும் உண்டாகவில்லை. அது ஆதிசேசனின் தலையிலேயே நின்று கொண்டிருந்தது. வசிஸ்டர் தன் பங்குக்கு, " அரை மணி நேரம் நல்ல விடயங்கள் பேசியதால் உண்டாகும் புண்ணியத்தை கொடுக்கிறேன். இந்த பூமி அந்தரத்தில் நிற்கட்டும்"" என்றார். இதைச் சொன்னதும் ஆதிசேசனின் தலையில் இருந்த பூமி கிளம்பி அந்தரத்தில் நின்றது. ஆதிசேசன் பூமியை எடுத்து தன் தலையில் மீண்டும் வைத்துக் கொண்டு, "நல்லது.... நீங்கள் இருவரும் வந்த வேலை முடிந்து விட்டது... போய் வரலாம்" என்றார்."கேட்ட விடயத்திற்கு தீர்ப்பு சொல்லாமல் வழியனுப்பினால் எப்படி?""என்றனர் ரிஸிகள் இருவரும் ஒருமித்த குரலில். "உண்மையை நேரில் பார்த்த பிறகு தீர்ப்பு சொல்வதற்கு ஒன்றுமில்லை. ஆயிரம் ஆண்டு தவசக்தியால் அசையாத பூமி, அரைமணி நேர நல்ல வி'யங்கள் பேசிய பலனுக்கு அசைந்து விட்டது பார்த்தீர்களா!..... நல்லவர் உறவால் கிடைக்கும் புண்ணியமே, தவத்தால் கிடைக்கும் புண்ணியத்தை விட சிறந்தது"" என்றார் ஆதிசேசன்



## வேலையில் கவனக்குறைவு கூடாது

ஒருசமயம் சிவபெருமான் பார்வதிதேவிக்கு ஆகமங்களை உபதேசித்தார். குழந்தைகளான விநாயகர், முருகனை நந்தியிடம் ஒப்படைத்து கவனித்துக் கொள்ள சொல்லி விட்டார். தேவிக்கோ பாடத்தில் நாட்டமில்லாமல் வேடிக்கை பார்க்க ஆரம்பித்து விட்டாள். சிவபெருமான் கோபமடைந்து அவளை மீனவப்பெண்ணாகப் பிறக்கும்படி சாபமிட்டார். இந்த நேரத்தில் விநாயகரும், முருகனும் அங்கே வந்தனர். தாயை சபித்த தந்தை மீது அவர்களுக்கு கோபம் ஏற்பட்டது. ஆகமச் சுவடிகளை கடலில் விட்டெறிந்தனர். மனைவியிடம் கோபித்தது போல பிள்ளைகளிடம் கோபிக்க முடியுமா? அதனால் கோபம் வேறு பக்கம் திரும்பியது. அம்பாளுக்கு பாடம் கற்றுக் கொடுக்கும் போது பிள்ளைகளை பாட அறைக்குள் அனுமதித்த நந்தீஸ்வரரிடம். ""கொடுத்த வேலையைச் சரிவர செய்யாத நீ பாதுகாவலுக்கு தகுதியில்லாதவன்,"" எனக்கூறி அவரை சுறாமீனாகப் பிறக்குமாறு சபித்தார்.

கடலுக்குள் சுறாவாகத் திரிந்த நந்தீஸ்வரர் கடும் அட்டகாசம் செய்தார். மீனவர்கள் துன்பப்பட்டனர். அதைப் பிடித்து தரும் மீனவனுக்கு தன் மகளை திருமணம் செய்து தருவதாக அறிவித்தார் மீனவர் தலைவர். சிவபெருமானே மீனவ இளைஞனாக வந்து சுறாவின் கொட்டத்தை அடக்கினார். தன் மீது பக்தி கொண்ட மீனவர் தலைவனுக்கு உண்மை வடிவில் காட்சி தந்து பார்வதியை மணந்தார். படிக்கும் போது வேடிக்கை பார்க்கக்கூடாது, வேலையில் கவனக்குறைவு கூடாது என்பதை உலகிற்கு எடுத்துக்காட்ட இந்த திருவிளையாடல் நிகழ்ந்தது.

# இந்துத் தமிழர் வரலாற்றில் பொலன்னறுவைக் காலம்.

யோ.துஸ்யந்தன்.

**கடந்த இதழில்................**

கட்டுரைக்கான அறிமுகத்தையும், பொலன்னறுவை ஆட்சிக்கான பின்னணி பற்றியும், பொலன்னறுவை தொடர்பாக பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களின் கருத்தினையும் 16 கோயில்கள் பற்றியும் பார்த்தோம்.

இந்த இதழில்..................

**கோயில் பெயர்கள்**

முன் குறிப்பிடப்பட்ட பதினாறு கோயில்களுக்கும், பெயர்கள் இருந்திருக்கும் எனினும், இவை அனைத்தும் அறியப்படவில்லை. இலங்கைத் தொல்பொருள் துறையினர் இவற்றை எண்கள் மூலம் அடையாளம் காண்கின்றனர். சிவ தேவாலயங்களுக்கு, முதலாம் சிவ தேவாலயம், இரண்டாம் சிவ தேவாலயம் என்றவாறு பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன.



இவற்றுள் சோழர் காலத்தில் வானவன் மாதேவி ஈச்வரம் என அழைக்கப்பட்ட இரண்டாம் சிவ தேவாலயமே முழுமையாகப் பேணப்பட்ட நிலையில் உள்ளது. இது தவிர ஐந்தாம் சிவ தேவாலயமும் ஓரளவுக்கு நல்ல நிலையில் உள்ளது.

ஏனையவற்றுள் பெரும்பாலானவை அடித்தளம் முதலான குறைந்தளவு தடயங்களையே கொண்டுள்ளன.

**கட்டமைப்புக் காலம்**

முழுமையாகப் பேணப்பட்டுள்ள வானவன் மாதேவி ஈஸ்வரமும், குறிப்பிடத்தக்க கட்டிடப்பகுதிகள் எஞ்சியுள்ள வேறு சில கோயில்களும், அவற்றின் கட்டிடக்கலைப் பாணியை ஆதாரமாக வைத்துச் சோழர் காலக் கோயில்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அத்துடன், வானவன் மாதேவி ஈஸ்வரத்தில் காணப்பட்ட கல்வெட்டின் துணை கொண்டு அது முதலாவது இராஜேந்திர சோழனின் ஆரம்ப காலத்தைச் சேர்ந்தது எனக் கணிக்கப்பட்டுள்ளது. முதலாவது சிவ தேவாலயம் பாண்டியர் கட்டிடக்கலைப் பாணியில் அமைக்கப்பட்டது. இது பன்னிரண்டு அல்லது பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனக் கருதப்படுகின்றது.

**கட்டிடக்கலை**




இங்கே கட்டப்பட்ட பெரும்பாலான கோயில்கள் அளவிற் சிறியனவாகவே காணப்படுகின்றன. சோழர்கள் தமது காலத்தில் வாழ்ந்த மக்களின் எண்ணிக்கைக் கேற்பவே இவற்றை நிர்மாணித்திருக்க முடியும். அத்துடன், உள்ளூர் மக்களை மதம் மாற்றும் முயற்சியிலும் சோழர்கள் ஈடுபடவில்லை இதனால், தமிழ் நாட்டில் கட்டப்பட்டது போன்ற பெரிய கோயில்கள் இலங்கையில் சோழர்களால் கட்டப்படவில்லை.




வானவன் மாதேவி ஈஸ்வரத்தின் அமைப்பு சோழர் காலத் திராவிடக் கட்டிடக் கலைப் பாணியைச் சேர்ந்தது. இக்காலத்தில் அமைக்கப்பட்ட ஏனைய கோயில்களும், இப் பாணியையே பின் பற்றியிருக்கும் எனலாம்.

இக் கட்டிடம் தமிழ் நாட்டில் கட்டப்பட்ட கோயில்களைப் போலன்றி அளவில் சிறியதாகக் காணப்படுகின்றது.கருவறையையும், அதன் முன்னால் ஒரு மண்டபத்தையும் கொண்ட இக்கோயிலின் கருவறையின் வெளிப்புறம், 20 அடி 6 அங்குல அளவு கொண்ட சதுர வடிவமானது. உட்புறம், 9 அடி 4 அங்குலச் சதுரம் ஆகும். இதிலிருந்து அதன் கருவறைச் சுவர் 5 அடி 6 அங்குலத் தடிப்புக் கொண்டது என அறிய முடிகின்றது. இதன் முன் மண்டபம் 16 அடி நீளமும், 9 அடி 4 அங்குல அகலமும் கொண்டது. கருவறையின் மீது அமைந்துள்ள விமானம், நிலத்திலிருந்து 31 அடி 9 அங்குல உயரம் கொண்டதாக உள்ளது.

**இன்றைய நிலை**



இங்கு நீங்கள் காணும் படத்தில் சிவலிங்கப் பெருமானுக்கு பூஜை செய்பவர் ஒரு சிங்கள சகோதரர். இப்படம் எடுக்கப்பட்ட போது வானவன் மாதேவி ஈஸ்வரத்தில் திருவிழா நடந்து கொண்டிருந்தது. திருவிழாவா? நீங்கள் கேட்பது புரிகிறது. அடுத்து இதையும் பாருங்கள்.



திருவழாக் காலப்பகுதியில் கார்மேகன் குருக்களினால் கோவில் பிரசாதங்கள் வழங்கப்படுவதையும், அதிகளவில் சிங்கள மக்கள் அதனை பயபக்தியுடன் வாங்குவதையும் காணலாம்.

வரலாறு வளரும்...............

வளைகாப்பு நடத்தும் வைத்தியரான இந்துவை மணந்த வெள்ளைக்காரப் பெண்மணி.



பாவிகளுக்கு சுவரில் சாட்டையடி




வணங்குகிறோம்




அவ்வளவுதானா? இலங்கையில் தமிழர்களின் நிலை. இன்னும் ஐந்து பத்து வருடங்களில் மூன்றாம் நிலையை அடைந்து விடுவர். பின்பு கொஞ்சம் கொஞ்சமாக இப்போதுள்ள குறைந்தளவு அதிகாரங்களும் பறிக்கப்பட்டு நினைக்கவே!.............கடவுளே!

| 2011 ல் இலங்கையின் மக்கள் தொகை கணக்கெடுப்பு | | |
|---|---|---|
| இனத்தவர் | சனத்தொகை | விகிதம் |
| சிங்களவர் | 15,250,081 | 74.90% |
| இலங்கை தமிழர் | 2,269,266 | 11.15% |
| இலங்கை முஸ்லிம்கள் | 1,892,638 | 9.30% |
| இந்திய தமிழர் | 839,504 | 4.12% |
| மலேயர் | 44,130 | 0.22% |
| பறங்கியர் | 38,293 | 0.19% |
| ஏனையோர் | 25,527 | 0.13% |
| மொத்த சனதொகை | 20,359,439 | 100.00% |




இந்த நாடும் நாட்டுமக்களும்!




இதெல்லாம் இனவாத பிரசாரம் இல்லையா? இலங்கையின் சகோதர இனமான சிங்களவர் களிற்கு சொந்தமான வைத்தியசாலைக்கு செல்ல வேண்டாம் என செய்யப்படும் தீவிர பிரசாரம்.




ஆபிரிக்காவில் தொடங்கியுள்ள இந்து அலை. தர்மம் பற்றி தெளிவுபடுத்தும் ஆபிரிக்க சகோதரர்கள்..





இந்துக்களின் வழிபாட்டினை கேவலப்படுத்தி தமிழ்நாட்டில் நடந்த மாநாடு ஒன்றிற்கான காட்சிப்பலகை. இதனில் உள்ள வரிகள் ஒவ்வொன்றும் எமது தர்மத்தை பழித் துரைக்கினறன. தமது வழிபாடுகளையும், மக்களையும் காப்பாற்ற முடியாமல் எமது இந்து தர்மத்தை மிகுந்த கேவலமாக சித்தரிக்கும் தமிழ்நாடு தவ்கீத் ஜமாத் அமைப்பினரை கண்டிப்போம்.



## விழுந்து விழுந்து விதைத்த விசம்.

நம்பி நாராயணன்

அந்த மழலைப் பூங்கா எனப்படும் ஆங்கில வழிப்பள்ளியில் நான் நுழைந்தபோது குழந்தைகளின் குதூகலம் என்னையும் தொற்றிக் கொண்டது. எத்தனை எத்தனை நிறங்களில் எத்தனை எத்தனை மலர்ந்த முகங்கள். வகுப்பறைகளில் முத்துச்சிதறுவது போல் சிரிப்பலைகள்.

முதலில் இருந்த வகுப்பறையை எட்டிப்பார்த்தேன். அந்த மிஸ் விழுந்து விழுந்து சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். விழுந்து விழுந்து என்றால் வேறு அர்த்தம் கொள்ள வேண்டாம். உண்மையிலேயே விழுந்து விழுந்து தான். அவர் அப்படி ஒவ்வொரு முறை விழும் போதும், விழுவது போல் முழுமையாக நடிக்கும் போதும் குழந்தைகள் உற்சாகமாக சிரிப்பார்கள். 'Jack and Jill want up thce hill' ல் ஜேக் விழும் போது மிஸ் விழுவார். குழந்தைகள் சிரிப்பார்கள்.


அடுத்த வகுப்பறை அங்கும் அதே விழுந்து விழுந்து கற்றுக் கொடுக்கும் காட்சி. ரைம் தான் வேறு. Humpy Dumpy sift on a wall. Humpy dumpy had a great fail. ராஜாங்க வைத்தியர்கள் எல்லேரும் வந்தும் கூட ஹம்பி டம்பி சாவைத் த:க்க முடியவில்லை. என்றாலும் வருத்தமில்லை ஒரே சிரிப்புத்தான். வேறு வேறு வகுப்பறைகள் . வேறு வேறு ஆங்கில் ரைம்கள். ஆனால் அடிப்படையில் குழந்தைகளை சிரிக்க வைப்பது எப்படி ? விழுந்து சிரிக்க வைப்பது "அடித்து அடிவாங்கி சிரிக்க வைப்பது துரத்தி சிரிக்க வைப்பது.

முதல் மின்னல் தோன்றி மறைந்த வேகத்தில் அடுத்த மின்னல் தோன்றியது. குழந்தைகள் சிரிக்க வேண்டுமானால் ஏன் அடுத்தவர் விழ வேண்டும். அழ வேண்டும்? ஒருவரின் அழுகைதான், வீழ்ச்சிதான் மற்றவரின் சிரிப்பா?

கவுண்டமணி செந்திலை அடித்தால் சிரிப்பு. செந்தில் கவுண்டமணியை லாவகமாக அடித்தால் சிரிப்போ சிரிப்பு. விவேக் அடிவாங்க துவங்கு முன் "எஸ்கேப்" என்று குறைந்த அடியோடு தப்பிச் சென்றால் சிரிப்பு. "ரெம்ப நல்லவன்னு சொல்லிட்டான்" என்று அடிக்கு மேல் அடி வாங்கும் வடிவேலின் அடிவாங்கும் சிறப்பு நமக்கு சிரிப்பு.

ஒன்று புரிந்தது வியாபார மொழியான ஆங்கிலமும், அவர்கள் வழிவந்த அர்த்தமற்ற படிப்பும் எமக்கு எடுப்பதும் கவிழ்ப்பதும் என்ற நாகரிகத்தை சிரிப்பாய்க் கற்றுக் கொடுத்துவிட்டது. ஆனால் வாழ்க்கைப் பண்புகளை அல்ல. ஆங்கில ரைம்களில் "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" இல்லை. "அறம் செய்ய விரும்பு" இல்லை. "ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம" இல்லை. வாழ்வு நெறிகள் எவையோ அவை பயிர் செய்யும் வயதில் கற்றுக் கொடுக்கப்படவில்லை. இதுதான் ஒரு செம் மொழிக்கும் வியாபார மொழிக்கும் ( Classical Language VS Mercantile Language) உள்ள வித்தியாசம். நாம் தான் இதைப் புரிந்து கொள்ளாமல் விதைக்க வேண்டிய பருவத்தில் விச விதையை விதைக்க ஆங்கிலப் பள்ளிக்கு குழந்தைகளை அனுப்பி விடுகிறோம். மேல்ல மெல்ல அந்த விடம் எம் குழந்தைகளின் மனதை கெடுப்பதை நாம் அறிவதில்லை.

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? எமது பண்பாடு, கலாசாரம் பெருமை என அனைத்துமே அழிந்து போக இந்த அன்னிய மோகமும் அடிமைக் கலாசாரமுமே காரணம். நாமும் வெளிநாடு போக வேண்டுமே, திரைகடல் ஓடியும் திரவியம் தேட வேண்டுமே. ஊரோடு ஒத்து வாழ வேண்டுமே என்பது எல்லாம் சரிதான். ஆனாலும் எமது பண்பாட்டை, கலாசாரத்தை, மொழியின் பெருமையை, இனத்தின் கௌரவத்தை, சமய மாண்பை வீட்டிலாவது சொல்லிக் கொடுத்தோமா? என்றால் அதுவும் இல்லை. எமக்கே அதன் மாண்பு தெரியாதே? அப்படித் தானே வளர்க்கப்பட்டு விட்டோம்.

# SARASWATHY HALL









Proprieter
P.T.S. Shanmuganathan
Mobile: 0779234176

# RAJAH
## CREAM HOUSE



www.saraswathyhall.com
Sareswathyhall_rajah@live.com

Tel: 021 320 7369, 021 222 1678
37. Sir pon. Ramanathan Road, Jaffna.
(Near Narchimarkovil Temple)

# KIRUBAA LEARNERS

KIRUBAA LEARNERS

கிருபா லேணர்ஸ் | කිරුබා ලර්නර්ස්



**Government Approved A Grade Driving Trainning School**

Regd No.Ds 589,

226, Kasthuriyar Road,
Jaffna.

அரச அங்கீகாரம் பெற்ற கனரக(A)
சாரதிப் பயிற்சிப் பரீட்சை

**தலமையகம்**

226,கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

**Call** 021 222 4353, 021 492 3200, 077 7225 292

## அரச அங்கீகாரம் பெற்ற கனரக சாரதிப் பயிற்சிப் பாடசாலை

- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள் நடைபெறும்.
- அரச, தனியார், ஊழியர்கள் சனி, ஞாயிறு உட்பட தாம் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சிகளை மேற்கொள்ள முடியும்.
- எமது கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சிகள் நடைபெறும்.
- மும் மொழிகளிலும் ஆண், பெண் இருபாலருக்கும் வாகனப் பயிற்சிகள் நடைபெறும்.
- தவணை முறையில் கட்டணம் செலுத்த முடியும்.
- வவுனியாவில் பெண்களுக்காக கார்ப்பயிற்சி பெண் ஆசிரியரால் வழங்கப்படுகின்றது.
- ஆண்,பெண் இருபாலருக்கும் *Auto Gear and Manual* வாகனப் பயிற்சி நடைபெறும்.
- எழுத வாசிக்க முடியாதவர்களுக்கு பரீட்சை பெறுவதற்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள் நடைபெறும்.
- இரவு நேர வாகனப் பயிற்சி நடைபெறுகின்றது.
- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

கண்டி வீதி,சாவகச்சேரி.
021-227-0700
021-492-3202

இல.227/6,கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.
[மதவடி அண்மையில்]
021-224-2022,071-454-6956

நாச்சிகுடா சந்தி
மன்னார் வீதி, முழங்காவில்.
021-300-6544
171-459-6955

இல.94,பிரதான வீதி,
மன்னார்.
023 225 1656
077-847-2732

36,கச்சேரி நல்லூர் வீதி,
[கச்சேரி அருகாமை]
யாழ்ப்பாணம்.
076-722-5292,021 222 6699

முதலாம் கட்டை சந்தி,
பருத்தித்துறை.
021-492-3201
071- 454-6951

A9 வீதி,கிளிநொச்சி.
[கச்சேரி முன்பாக]
021-228-5505
071-454-6955

இல.216,A9 வீதி,
வவுனியா [வசந்தி
திரையரங்கு முன்பாக]
024-222-777,
0777-100-444

பிரதான வீதி, நெல்லியடி
[பொலிஸ் நிலையம் முன்பாக]
021-300-6550
071 -454-6958

வாடியடி சந்தி,பூநகரி.
021-320-1818
071-454-6955

புளியடிச்சந்தி,
முல்லைவீதி,விசுவமடு.
021-320-1515
071-454-6955